

# தென்னாடு

மார்கழிப் பெருவிழா சிறப்பிதழ்

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 3ம் நாள் (18-12-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739

## மார்கழிப் பெருவிழா 2021



தென்னாடு மார்கழிப் பெருவிழா மார்கழி 10ம் 11ம் நாள் (டிச 25ஃ26) யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. இது நான்கு அரங்குகளாக இரண்டு நாளாக நடைபெறும். இதில் பங்கு கொள்ள மதுரை சொ சொ மீ ஐயா இலங்கை வருகிறார். ஆதிரையான் புகழ் கேட்க அனைவரும் அணிதிரண்டு வாரீர்.

# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா

# முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் தொடங்குகிறது

மார்கழித் திங்களானது விழாக்கள், நோன்புகள், வழிபாடுகள் என்று பத்தி நிறைந்த மாதமாகும். மார்கழியில் தான் திருவெம்பாவை, திருவாதிரை, வைகுண்ட பதிற்றொருமை நாள் (ஏகாதசி), பாவை நோன்பு என்று பல வழிபாடுகளும், திருவிழாக்களும் நடைபெறும். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை என்று ஊர் எங்கும் இறைப் பாடல்களும், சங்கு, சேமக்கலம் (எறிமணி), மத்தளம், உடுக்கு, மேளம், நாதசுரம் என்று இறையிசை ஓசையும் மார்கழியை மங்களகரமாக்கும்.

பொதுவாகத் தேவர்களைக் கொண்டாடுவது நிறைமதி நன்னாளில் ஆகும். மார்கழியில் தான் சிவனுக்குரிய ஆதிரை விண்மீனும் நிறைமதியும் சேர்ந்து வருவதால், இத்திங்கள் தேவர்களுக்குத் தலைவனான சிவபெருமானுக்கு உரிய சிறப்பு மாதமாகும். அரசனுக்கு உரிய விழாவை ஊரெல்லாம் கொண்டாடுவது போல் தொல் புகழ் கொண்ட சிவபிரானின் விழாவை உலகமே கொண்டாடுகிறது. மானிடர் மட்டுமல்ல, தேவாதி தேவரும் சிவனைக் கொண்டாடும் திருவிழாவே இந்த மார்கழித் திருவிழா எனும் மார்கழிப் பெருவிழா.

இதனைச் சேந்தனார் சிறப்பாகத் திருப்பல்லாண்டில் விபரித்துள்ளார்.



**ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்**
**அணியுடை ஆதிரைநாள்**
**நாராயணனொடு நான்முகன் அங்கி**
**இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர் குழாங்கள்**
**திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்**
**பல்லாண்டு கூறுதுமே - (தி.9.ப.12)**

அப்பர் பெருமானும் ஆதிரை நாளினை நான்காம் திருமுறையில் 21ம் பதிகத்தில் பத்துப் பாடல்களில் விபரித்துள்ளார்.

**வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்**
**சோதிகள்விட்டுச் சுடர்மாமணிகள் ஒளி தோன்றச்**
**சாதிகளாய பவளமும் முத்துத் தாமங்கள்**
**ஆதி ஆரூரார் ஆதிரைநாளால் அது வண்ணம்**

வீதிகள் தோறும் வெண் கொடிகளும் அலங்காரக் கூரைகளும், சிறந்த பவளங்களாலும் முத்துக்களாலும் புனையப்பட்ட மாலைகளும், பேரொளி வெளிவந்து கொண்டிருக்கின்ற மாமணிகளைக் கொண்ட ஆதி ஆரூரனின் திருவாதிரைத் திருநாளின் பெருவனப்பு எப்பொழுதும் அடியவர்கள் நினைக்குமாறு மனதைவிட்டு அகலாது உள்ளது.

### திருவெம்பாவை நோன்பு

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழியில் வரும் திருவாதிரைக்கு பத்து நாட்களுக்கு முன்பிலிருந்து கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நோன்பில் அதிகாலையில் எழுந்து நீராடி சிவகாமி அம்மையுடன் கூடிய நடராசப் பெருமானை வழிபடுவர். இவ்விரத்தினை பெரும்பாலும் கன்னிப் பெண்கள் நல்ல கணவர் அமையப்பெறவேண்டிக் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின்போது திருவெம்பாவை பாடல்கள் பாடப்படுகின்றன.

இவ்விழாப் பற்றி கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

**மாதர்கொள் மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்**
**ஆதிரை முன் ஈரைந்தே ஆகிய தினங்கள் தம்மில்**
**மேதகு மனைகள் தோறும் அழைத்திருள் விடிவதான**
**போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்.**

### திருவாதிரை நோன்பு

திருவாதிரை நோன்பு என்பது திருவாதிரை நாண்மீனுடன் கூடிய நிறைமதி நாளில் நோற்கும் ஒரு நோன்பாகும். அத்துடன், திருவெம்பாவை வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதி நாளாகவும் மார்கழித் திருவாதிரை அமைகின்றது. சிவனுக்குரிய நாண்மீன் திருவாதிரை ஆகும். இவ்விரதம் சிவனுக்கு மிகவும் உகந்தது. சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறுவர்.

### ஆதிரைப் பெருவிழாவும் ஆதிரை அருட்காட்சியும்

மார்கழித் திங்கள் திருவாதிரை நாண்மீனுடன் கூடிய நன்னாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. சைவர்களின் தலைமைக் கோயிலான சிதம்பரத்திலும் அத்துடன் திருவாரூர் மற்றும் உத்தரகோசமங்கை மங்களநாதசுவாமி கோயிலிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் குறிப்பாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திலும், தேர் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## புதுப்பொலிவுடன் காசி விசுவநாதப் பெருமான் திருக்கோயில் தூய்மையான வாரணாசி பத்தியை மேலும் பன்மடங்காக்குகிறது



தமிழர்களின் தலைமைக் கோயில் சிதம்பரம் போல் உலகனைத்தும் உள்ள பன்மொழி இந்துக்களின் தலைமைக் கோயில் காசி என்றே கூறலாம். காசி என்பது ஒரு புனிதத்தலம். இது பலமுறை பல படையெடுப்பாளர்களால் இடித்தழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது. அந்தவையில் இம்முறை இந்தியப் பிரதமர் மோடி அவர்களின் ஆணையில் மீண்டும் பிரமாண்ட முறையில் விரிவாக்கப்பட்டு புதிதாக்கப்பட்டு கடந்த 13ம் திகதி (13/12/2021) திறந்துவைக்கப்பட்டது.

கோயிலைச் சுற்றியிருந்த ஆக்கிரமிப்புக்களையெல்லாம் அகற்றி, மிகச் சிறப்பான கட்டுமானங்கள் எழுப்பப்பட்டுள்ளது. வாரணாசி முழுவதும் தூய்மையான நகராக மாற்றப்பட்டுள்ளது. குறிப்பாக கங்கை ஆறு மிகவும் தூய்மையாகவும், நீர் அருந்தும் அளவிற்கு சுகாதாரமாகவும் காணப்படுகின்றது. கடந்த கால சூழல்களையெல்லாம் மாற்றி மீண்டும் காசி விசுவநாப்பெருமான் கோயிலின் பழமையும், சிறப்பும் அழியாமல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## தென்னாடு மார்கழிப் பெருவிழாவில் நால்வர் காட்டிய நெறிகளை நயம்பட உரைத்திட யாழ் வருகிறார் சொ.சொ.மீ சுந்தரம் ஐயா




இறையியல் நெறியில் பல ஆண்டுகளாக சொற்பொழிவுகள் செய்து வருபவர் மதுரை சொ.சொ.மீ சுந்தரம் அவர்கள். திருவாசகத்தின் பொருளை இவர் விளக்கும் போது கேட்போர் மனம் கரையும். தென்னாடு வலைத் தொலைக்காட்சியில் திருவாசக முன்னுரையை மிகவும் சிறப்பாக வழங்கியவர் ஐயா அவர்கள்.உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று, தமிழ் மற்றும் சமயம் சார்ந்த சொற்பொழிவுகளை ஆற்றிவருபவர். திருமுறைகளில் ஆழம் கொண்டவராகவும் சமயம் சார்ந்த செய்திகளை எல்லோர் மனதிலும் எளிதில் கொண்டு சேர்ப்பதில் வல்லவராகவும் திகழ்பவர். ஐயாவின் பேச்சுகளைக் கேட்டுப் பலர் சமயத்துறையிலும், வாழ்விலும் சிறப்படைந்துள்ளனர். தென்னாடு செந்தமிழாகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்தும் மார்கழிப் பெருவிழாவில் நால்வர் காட்டிய நெறிகளை நயம்பட எடுத்துரைப்பதற்காக யாழ்ப்பாணம் வருகிறார் ஐயா அவர்கள். ஐயாவின் பேச்சினைக் கேட்க விரும்புபவர்கள் மடத்தினைத் தொடர்புகொள்ளுங்கள்.

# சிறப்பார்ந்த முறையில் கொண்டாடப்பட்டது கார்த்திகைத் தீபத்திருநாள்



சிவத்திரு யாழவன் சிவவேதன்



சைவத்தமிழ் விழாக்களில் தவிர்க்க இயலாத ஒன்று தான் கார்த்திகை விளக்கீடு. கார்த்திகை விளக்கீடு என்பது கார்த்திகை திங்கள் நிறைமதி நாளும் சகடு (கார்த்திகை) விண்மீனும் சேர்ந்த திருக்கார்த்திகை நாளில் தமிழர் தமது இல்லங்களிலும் கோயில்களிலும் பிரகாசமான தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடும் ஒரு தீபத்திருநாள் ஆகும். தமிழ்நாட்டில் பெரு மழை பொழிந்து இயற்கை கருக்கொள்ளும் காலம் கார்த்திகை திங்கள். நெருப்புப்பூ என்றும், கார்த்திகைப்பூ என்றும் வழங்கப்படும் காந்தள் பூ மிகுதியாக மலரும் காலம் கார்த்திகை திங்கள். சகடு (கார்த்திகை) எனப்படும் விண்மீன் கூட்டம் கீழ்வானில் மாலையில் தோன்றும் காலமும் கார்த்திகை திங்களே என்பது இதன் இரட்டிப்புச் சிறப்பு.

**“வேண்டத்தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ**
**வேண்டி என்னைப் பணி கொண்டாய்**
**வேண்டி நீ யாது அருள் செய்தாய்**
**யானும் அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்**
**அதுவும் உன்தன் விருப்பு அன்றே.”**

என்ற பாடலில் மணிவாசகர் குறித்துப் போகும் **“வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ”** என்ற செந்தமிழ்ச் செம்மறை வாக்கின் பொருளை உணர்த்தி திருவிளையாடல் புரிந்த இறைவன், ஆதியும் அந்தமுமற்ற தனிப் பெரும் சோதியாக மாறுபாடுற்று நின்ற அயன், அரி மத்தியில் விரிந்து கிளர்ந்த நாளே திருக்கார்த்திகைத் தீபத் திருநாள் ஆகும்.

தீத்துகளாக, சோதிப் பிழம்பாக இறைவன் வெளிப்பட்டு நின்ற நாள் சிவன் கோயில்களில் மட்டு மன்றி, முருகன் மற்றும் திருமால் கோயில்களிலும் செம்மையாகக் கொண்டா டப்படுகின்றது.

**குமராலய தீபம்:** இவ் விழா முருகன் கோயில் களில் கொண்டாடப்படும். கார்த்திகை திங்களில் ஆரல் (கார்த்திகை) விண்மீன் கூடிவரும் நாள்.

**திருமால் ஆலய தீபம்:** இத்திருநாள் திருமால் கோயில்களில் கொண்டாடப்படும். கார்த்திகை திங்களில் சகடு (ரோகினி) விண்மீன் கூடிவரும் நாள்.

**சர்வாலய தீபம்:** இவ்விழா ஏனைய சைவ கோயில்களில் வீடுகளிலும் கொண்டாடப்படும். கார்த்திகை திங்களில் நிறைமதி நன்னாளில் இது கொண்டாடப்படும்.

இதன் முதல் நாளான அடுப்பு (பரணி) விண்மீன் நாளில் சைவ சமயிகள் பகலில் மட்டும் ஒருபொழுது உண்டு கார்த்திகையன்று அதிகாலையில் நீராடி இறைவனை வழிபட்டு நீர் மட்டும் அருந்தி இரவு கோயிலுக்குச் சென்று வழிபாடு இயற்றுவர். மறுநாட்காலையில் காலைக்கடன்களை முடித்து நீராடி பாரணை அருந்தி விரதத்தை நிறைவு செய்வர். பன்னிரண்டு ஆண்டுகள் இவ்விரதம் இருப்பவர்கள் வேண்டும் வரங்களைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

**“...மாக விசும்பின்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகு விளக்குஉறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுஉடன் அயர....” என்ற அக நானூற்றுப்பாடலும்,**

**“ஆர்த்தெழுந்த ஞாட்பினுள் ஆளாள் எதிர்ந்தோடித்**
**தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி**
**கார்த்திகைச் சாற்றின் கழிவிளக்கைப் போன்றவே**
**போர்க்கொடித் தானைப் பொருபுனல்நீர் நாடன்**
**ஆர்த்துஅமர் இட்ட களத்து.” என்ற களவழி நாற்பதின் வரிகளும் கார்த்திகைப் பெருவிழாவைச் சான்று படுத்திப் போகின்றன.**

கார்த்திகை என்றாலே கண் முன் விரிந்து போகின்றவை சொக்கப்பனை எரிப்பும், திருவண்ணாமலைத் தீபமும் தான். அண்ணாமலையில் தீபத் திருநாளன்று அதிகாலையில் மலையடிவாரத்தில் ஏற்றப்படுவதைப் பரணி தீபம் என்றும் மாலையில் மலையுச்சியில் ஏற்றப்படுவதை மகாதீபம் என்றும் குறிப்பிடுகிறார்கள். இத்தீபம் சிவன் சோதிப்பிழம்பாக, நெருப்பு மலையாக நின்றார் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஏற்றப்படுகிறது. இத்தீபம் ஏற்றும் மலையானது 2668 அடி உயரம் கொண்டது. இம்மலை மீது செம்பு ,இரும்பு கொண்டு தயாரிக்கப்பட்ட கொப்பரையில் தீபம் ஏற்றுவர்.

இக்கொப்பரையை பொது வருடம் 1668-இல் பிரதானி வேங்கடபதி ஐயர் என்பவர் வெண்கல கொப்பரையாகச் செய்து கொடுத்தார். பின்பு பொது வருடம் 1991-இல் இரும்பினால் உருவாக்கப்பட்ட கொப்பரை தற்போது உள்ளது இக்கொப்பரையை மலை மீது எற்றுபவர் மீனவர் ஆவர். இத்தீபம், சுமார் 3 கிலோவுக்கும் மேற்பட்ட நெய்யும், 1000 மீட்டர் துணியும் பயன்படுத்தி ஏற்றப்படுகிறது.

ஏனைய கோயில்களில் சொக்கப்பனை எரித்தல் என்ற முறையில் தீபத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இம்முறையும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு அண்ணாமலை மற்றும் ஏனைய கோயில்களிலும் வழிபாடுகள் இடம்பெற்றன. குமாராலாய தீபம் மற்றும் திருமால் ஆலய தீபங்களும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டன.

**“வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்**
**தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.”**


என்று தமிழ்ஞானசம்பந்தரும் இவ்விழாவை செம்மாந்த முறையில் சிறப்பித்து பதிகம் பாடியுள்ளார். உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனை, அலகு இல் சோதியனை, அம்பலத்துள் ஆடுபவனை நாமும் சோதியாய்ப் போற்றி, வாழ்த்தி வணங்கிப் பேரின்பம் அடைவோம்.

**“ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி”**
**திருச்சிற்றம்பலம்**

# நாவலர் நினைவு தினம்

பொது வருடம், 1847-டிசெம்பர் 31 ஆம் நாள் வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோயிலில், பற்றி எரியத் தொடங்கிய நெருப்பொன்று பல்லாண்டுகள் சைவத்துக்கும் தமிழுக்குமாக எரிந்து அணைந்தது. அது வேறு யாருமல்ல, சைவமும் தமிழும் தனது இரு கண்கள் என்று கூறி அவற்றைப் பேணி வளர்த்த ஆறுமுக நாவலர் தான்.

பிரசங்கங்களையும், நூற்பதிப்பையும் தன்னுடைய ஆயுதமாக ஏந்தி சைவத்தையும் தமிழையும் காத்தவர் இவர் என்றால் சற்றும் மிகையில்லை. இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. இத்துடன் மட்டும் தன் பணியை வரையறுத்து விடாது பாடசாலை நிர்மாணிப்பு, சமூக சேவை எனப் பலவகையில் பணியாற்றிய இவரின் நினைவு நாள் 27.11.2021 அன்று இலங்கை முழுவதிலும் பல்வேறு அமைப்புக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.




**“நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்தில ரேற் சொல்லு தமிழெங்கே”**
**திருச்சிற்றம்பலம்**

# மார்கழியில் ஓர் பெருஞ்சிவ வழிபாடு – திருவெம்பாவை விரதம்

ஆதியும் அந்தமுமில்லாப் பெருஞ் சோதியாம் ஈசனின் எல்லையிலாப் பெரும் புகழையும், பேரருளையும் பாடிப் பணிந் துய்யும் காலமே திருவெம்பாவை நோன்பு காலம். அதிகாலையில் எழுந்து நீராடி, புதுப்பூக்களாலும், பசும் இலைகளாலும் இறைவனைப் பூசித்து மனம், மொழி, மெய் எனும் மூன்றையும் இறைவன் திருத்தாளில் சமர்ப்பித்து, தேன் சொட்டும் திருவெம்பாவைப் பதிகத்தால் இறைவனை வணங்கின், அழிவில்லா ஆனந்தத்தை சுவைக்கலாம். இம்முறை கீழறை வருடம் கார்த்திகை 25ஆம் நாளில் (டிசம்பர் 11) திருவெம்பாவை நோன்பு ஆரம்பித்தது.

தமிழ் நாட்டின் பெரும்பாலான கோயில்களில் இவ்விழா பெருஞ்சிவ விழாவாகக் கொண்டாடப்படும். உண்ணாமுலை அம்மையுடன் அண்ணாமலை ஐயன் உறையும் திருஅண்ணாமலையில் வைத்து, வாதவூர்ப் பெருமானார் தீந்தமிழினால் இயம்பிச்சென்ற தேன் சொட்டும் திருப்பாடற் தொகுப்பே திருவெம்பாவை ஆகும். இந்தப் பாடல் தொகுப்பின் பெயரால் இவ்விரதம் அழைக்கப்படுவது



தெய்வத்தமிழினதும், அதன் செம்மாந்த புலமையினதும் பெருமையே.

தமிழ் நாட்டின் திருவண்ணாமலை, தில்லை உட்பட பல கோயில்களிலும் ஈழத்தின் பல கோயில்களிலும் இவ்விழா செம்மைமிகு முறையில் கொண்டாடப்படும். தீந்தமிழால் தண்பாண்டி நாட்டானைத் தொழுது இறைஞ்சி அவனடி அடைவோம்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்

## அருள்மிகு உண்ணாமுலை அம்மை உடனுறை திருஅண்ணாமலையார் [அருணாச்சலேசுவரர்] திருக்கோயில் - திருவண்ணாமலை

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 233வது திருக்கோயில் திருவண்ணாமலை



எல்லா யுகங்களிலும் அழியாமல், கயிலை மலைக்கு ஒப்பான, சைவர்களால் சிவபெருமானே மலையுரு கொண்டுள்ளார், என நம்பப்படும் திருவண்ணாமலை திருஅண்ணாமலையார் (அருணாச்சலேசுவரர்) திருக்கோயில், நினைத்தாலே முத்தி தரும் பேரருள் மிக்க தலமாகும்.

**அமைவிடம் : திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு**

இந்நகரம், புதுச்சேரி - பெங்களூரு நகரை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை எண் 66ம், விழுப்புரம் - வேலூர் - பெங்களூரு நகரை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை எண் 234ம் மற்றும் சேலம் - திருவண்ணாமலை - ஆரணி - சென்னை நகரை இணைக்கும் மாநில நெடுஞ்சாலை எண் 39ம், இணைக்கும் இடத்தில் அமைந்துள்ளது.

**இறைவர் திருப்பெயர் :** அண்ணாமலையார், அருணாச்சலேசுவரர்
**இறைவியார் திருப்பெயர் :** உண்ணாமுலை அம்மை
**கோயில் மரம் :** மகிழ மரம்
**தீர்த்தம் :** பிரம தீர்த்தம், சிவகங்கை தீர்த்தம்
**வழிபட்டோர் :** விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர், சனந்தனர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பரணதேவ நாயனார், சேக்கிழார், அருணகிரிநாதர், ரமண மாமுனிவர்.
**பாமாலை :** சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், பரணதேவ நாயனார், சேக்கிழார், அருணகிரிநாதர்.

### நாயன்மார்களால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

#### திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே."

"பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின்ற திரவெருவித்தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே."

#### திருநாவுக்கரசரால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

"ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்டோ ள் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே."

"வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனோ."

"பட்டி ஏறுகந் தேறிப் பலஇலம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தி அண்ணாமலை கைதொழுக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே."

#### மாணிக்கவாசகரால் அருளப்பட்டவை

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்."

"செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்."

### திருத்தலச் சிறப்பு

இலிங்கமே மலையாக அமைந்த தலம். தென்னிந்தியாவின் மிகச் சிறந்த சிவத்தலங்களுக்குள் ஒன்று. ஐம்பூதத் தலங்களில் முக்கியமான நெருப்புத்தலம் இதுவாகும். **"நினைத்தாலே முத்தி தரும் திருஅண்ணாமலை"** என சிறப்பு பெற்ற தலம். நான் என்ற அகந்தை அழித்த தலம். உண்ணாமுலையம்மன் சிவபெருமானிடம் இடப்பாகம் பெற, கிரிவலம் வந்து தவம் செய்த தலம். உமையம்மைக்கு சிவபெருமான் தன் உடம்பில் சரிபாதியாக இடப்பாகம் தந்து சோதி வடிவமாய் காட்சி தந்த தலம். அருணகிரிநாதர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, முத்திபேறு அடைந்த தலம்.

அருணகிரிநாதர் வாழ்க்கை வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்ள முயன்ற போது, முருகனே வந்து காப்பாற்றி, திருப்புகழ் பாட உத்தரவிட்டு, ஆட்கொண்ட தலம். எல்லா சிவத்தலத்திலும் மூலவர் பின்புறமுள்ள இலிங்கோற்பவர் தோன்றிய தலம். ஒன்பது கோபுரம், ஏழு வீதிகளுடன் 25 ஏக்கரில் அமைந்துள்ள மிகப்பெரிய தலம். தென்னிந்தியா விலேயே 2வது உயரமான கோபுரம் (217 அடி) கொண்ட அற்புத அழகு கொண்ட தலம். தமிழகத்தின் திருப்பதி என்று



போற்றப்படுமளவுக்கு பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் தினந்தோறும் வந்து வழிபடும் அதி அற்புத சத்தி வாய்ந்த சிவத்தலம். 6ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோயில், சேர, சோழ, பாண்டிய, வைசாள மன்னர்களால் பல்வேறு காலகட்டங்களில் திருப்பணி செய்யப்பட்ட மிகப்பழமையான திருக்கோயில். ஏராளமான சித்தர்கள், ஞானிகள் வாழ்ந்த, தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்பு வாய்ந்த மலை.

அம்மனின் ஐம்பத்தொரு சத்தி பீடங்களில் இது அருணை சத்தி பீடம் ஆகும். முருகப்பெருமானுக்கு ஆறு படை வீடு இருப்பது அனைவருக்கும் தெரியும். இதே போல் விநாயகருக்கும் ஆறு படை வீடு இருக்கிறது. இத்தலத்தில் கிளிக்கோபுரத்தின் கீழ் இடது பக்கம் உள்ள அல்லல் போக்கும் விநாயகர் சன்னதி, விநாயகரின் முதல் படை வீடாகும். சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவபுரங்களில் இது 233வது தேவாரத்தலம் ஆகும்.

**கிரிவல சிறப்பு:** கார்த்திகைத் திங்கள் சகடு (கார்த்திகை) விண்மீன் கூடிய நாளில் தான் உமையம்மைக்கு எம்பெருமான் இடப்பாகம் அளித்தார் என்பதால், அன்றைய நாளில் இலிங்கமாக விளங்கும் திருவண்னாமலையை சுற்றுவது சிறப்பு. இதுவே 'கிரிவலம்' எனப்படுகின்றது. முனிவர்களும் ஞானிகளும் சித்தர்களும் ஒவ்வொரு தமிழ்த் திங்கள் உதிப்பின் (மாதப்பிறப்பு) போதும், கழுவாய் காலத்திலும் மலையை வலம் வந்து அருள் பெற்றார்களாம். எனவே அந்த நாட்களில் கிரிவலம் வருவதும் சிறப்பு. விரதமிருந்து அதிகாலையில் கணவனும் மனைவியும் நீராடி மலை வலம் வந்தால் மகப்பேறும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**அண்ணாமலை என பெயர் வர காரணம்:** **'அண்ணல்'** என்றால் நெருங்குதல் எனப் பொருள். **'அண்ணா'** என்றால் நெருங்காமை எனப் பொருள். அதாவது, நான்முகனுக்கும் திருமாலுக்கும் அவர்களில் யார் பெரியவர் என்ற மோதல் வந்தபோது, பரம்பொருளே இந்த மலையில் பெரிய தீப்பிழம்பாய் தோன்றினார். உடனே இருவரும் இதன் அடி / முடியை யார் காண்கிறார்களோ அவரே பெரியவர் என நான்முகன் அன்னமாக மாறி முடியையும், திருமால் பன்றியாக மாறி அடியையும் தேடி சென்ற போது, எம்பெருமான் தலையிலிருந்து தாழம்பூவொன்று விழுந்துகொண்டிருந்தது. அதை சந்தித்த நான்முகன் **"எங்கு இருந்து வருகிறாய் என வினவ"**, தாழம்பூ **"நான் எம்பெருமானின் தலையிலிருந்து விழுகிறேன்."** என கூறியது. முடியை காண்பது அரிது என உணர்ந்த நான்முகன், தான் முடியயை கண்டுவிட்டதாக பொய் கூறுகிறார். அதற்கு தாழம்பூவும் துணை நின்றது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், நான்முகனுக்கு கோயில் அமைக்கக்கூடாது என்றும், தாழம்பூவை சிவபூசைக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் தண்டனை அளித்தார். எனவே முடிவாக மலையில் தீப்பிழம்பாக எழுந்த எம்பெருமானின் அடிமுடியை நெருங்கவே முடியவில்லை. எனவேதான் அண்ணாமலை என பெயர் பெற்றது.

### திருக்கோயில் அமைப்பு

கோயிலில் ஒன்பது கோபுரங்கள் உள்ளன. தென்னிந்தியாவிலேயே 2வது உயரமான கோபுரம் (217அடி) கொண்ட அற்புத அழகு கொண்ட தலம் இதுவாகும். இக்கோயிலில் உள்ளே ஆறு வீதிகள் உள்ளன. 142 சன்னதிகள், 22 பிள்ளையார்கள், 306 மண்டபங்கள், 1000 தூண்கள் கொண்ட ஆயிரங்கால் மண்டபம், அதனடியில் பாதாள இலிங்கம் (பாலரமணர் தவம் செய்த இடம்), 43 செப்புச் சிலைகள், கல்யாண மண்டபம், அண்ணாமலையார் பாத மண்டபம் என அமைந்த கோயில், கோயிலின் உள்ளேயே சிவகங்கைத் தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்ற இரு பெரிய குளங்களையும் கொண்டது. திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலின் மொத்த கட்டமைப்பும் கட்டிமுடிக்க சுமார் 1000 வருடங்கள் ஆகி இருப்பது, கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 6ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோயில், சேர, சோழ, பாண்டிய, வைசாள மன்னர்களால் பல்வேறு காலகட்டங்களில் திருப்பணி செய்யப்பட்ட மிகப்பழமையான திருக்கோயிலாகும்.

**தீபக்காட்சி மண்டபம்:** அண்ணாமலையார் கோயிலிலுள்ள கிளிக்கோபுரம் அருகில் தீபக்காட்சி மண்டபம் உள்ளது. மங்கையர்க்கரசி அம்மையார் என்பவர், இந்த மண்டபத்தை 1202ல் எழுப்பினார். இதை மங்கையர்க்கரசி மண்டபம் என்றும் சொல்வர். இங்கு தான் தீபம் ஏற்றும் முன்பு, ஐம்மூர்த்திகளும் எழுந்தருளுவர். அதாவது, கார்த்திகைத் திங்கள் சகடு (கார்த்திகை) நாண்மீனும் கூடிய நாளில், அதிகாலையில் அண்ணாமலையார் சன்னதியில், ஒரு தீபம் ஏற்றி, பின் அதன் மூலம் ஐந்து தீபங்கள் ஏற்றி, அவை ஐந்தையும் ஒன்றாக்கி அண்ணாமலையார் அருகில் வைத்து, பூசை செய்வார். இது **"ஏகன் அநேகனாகி, அநேகன் ஏகனாகுதல்"** எனும் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

பின் மாலையில் தீபக்காட்சி மண்டபத்தில் ஐம்மூர்த்திகள் எழுந்தருளப்பட்டு, அகண்ட தீபம் ஏற்றப்பட, மலையில் பெரிய கொப்பரையில், மகாதீபம் எனப்படும் பெருந்தீபம் ஏற்றப்படும். இப்பெருந்தீபச் சோதியே திருமால், நான்முகனுக்கிடையே தோன்றிய, பரம்பொருள் சோதி என நம்பப்படுகின்றது. இந்த தீபச்சோதி திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் தெரியும். இச்சோதியை காண, மாபெரும் கூட்டம் திரளும். திருவண்ணாமலையில் தீபத்திருநாள் ஓர் சிறப்பான திருவிழாவாக நடைபெறுவது முக்கியம்சமாகும்.

எனவே நாமும், எம் வாழ்வில் துன்பங்கள் நீங்கி, நோயற்ற வாழ்வும், குறையற்ற செல்வமும், தீரா ஆயுளும் பெற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழ, நினைத்தாலே முத்தி தரும் உண்ணாமுலை அம்மை உடனுறை அண்ணாமலையானை நினைத்து, இயலுமானவர்கள் சென்று கிரிவலப்பேறையும் பெற்று, போற்றிப் பரவிடுவோமாக.

"தீயிடை மூன்றாய் திகழ்ந்த அண்ணாமலையானே போற்றி"
திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்
nilavan@thennadu.org



தென்னாடு



சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org

# மார்கழிப் பெருவிழா!

தமிழ் இலக்கிய வரலாற்றின் மணிமகுடமாய் திகழும் சிலப்பதிகாரம், பழந்தமிழர்கள் வருடம் முழுவதும் விழாக்களை கொண்டாடி மகிழ்ததாகச் சொல்கின்றது. அந்நியர் ஆட்சியாலும் காலமாற்றங்களாலும் அவை குறைந்து சுருங்கி திங்கள் ஒரு விழாவாகி, அதுவும் அற்றுப்போய், வருடத்தில் ஓர் இரு விழாக்களோடு எமது விழாப்பண்பாடு கவலைக்கிடமாக குறுகிப்போனது தான் பெரும் சோகம்!

பனியும் குளிருமாக, உடலளவில் சோம்பலை ஏற்படுத்தும் காலப்பகுதியான மார்கழி, தைத் திங்கள்களில் அதிகாலையில் எழுந்து இறை வழிபாடு செய்து, புத்துணர்வை உடலுக்குள் ஏற்படுத்துவதற்காக அதிக விரதங்களை முன்னவர்கள் அப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தினர். ஆனால் பின் வந்தவர்கள், மார்கழித் திங்களை பீடைத்திங்கள் என்றனர்! உடலுக்கு காலநிலை மாற்றத்தால் சளி, காய்ச்சல் போன்ற நோய்களைக் குறித்த திங்கள் கொடுப்பதாலும் கடும் குளிரினாலும் இந்த அவப் பெயர் மார்கழிக்கு ஏற்பட்டது!

ஆனால் மார்கழியை பழந்தமிழர்கள் பீடு உடைய திங்கள் என்றே அழைத்தனர். அதாவது உயர்வுடைய திங்கள் என்பது அதன் பொருள்! சிவனுக்குரிய திருவாதிரை நன்னாள் உற்சவம் கொள்வதும், திருமாலுக்குரிய சுவர்க்க வாசல் திறக்கும் பதிற்றொருமை (ஏகாதசி) பிறைநன்னாள் வருவதும், மாணிவாசகரும் ஆண்டாளும் பாடிப்பரவியதும் இந்த மார்கழியில் தான். இந்த மார்கழியைத் தான்!

சிவபூமி என்று சிறப்பிக்கப்படும் எங்கள் நிலத்தில், **‘நாம் இந்த மார்கழிக்கு என்ன முக்கியத்துவத்தை கொடுத்தோம்.?’** என்ற கேள்வி எம்மில் பலருக்கு இருக்கலாம். நவீனம் வளர்ச்சி பெற முதலும், கையடக்கப் பேசிகள் எம் கைகால்களுக்கு விலங்கிட முதலும், திருவாதிரை நாளுக்கு, திருவெம்பாவை விரதம் இருந்து, அதிகாலை எழுந்து சங்கு முழங்கி, சேமக்கலம் அடித்து, சிறுவர்களாய் வீதிகளெங்கும் திருவெம்பாவை பாடல்களைப் பாடி, மற்றவர்களையும் துயிலெழுப்பி, புத்துணர்வும் இறைசிந்தனை உணர்வும் சிறக்கவே இந்த மண்ணில் வாழ்ந்தோம்!

காலமாற்றம் தந்த கோலமாற்றத்தால், எங்கள் அடுத்த தலைமுறைக்கு இந்தப் புதையல்களை எல்லாம் கையளிக்க முடியாதவர்களாய் ஆனோம். இந்த நிலை மாறவேண்டும், சைவத்தின் சாரமும், வாழ்வியல் கோலமும் இந்த மண்ணில் மீண்டும் மீள வேண்டும் என்பதற்காகவே **தென்னாடு செந்தமிழாகம சிவமடம்** இந்த வருடம் தொடங்கியுள்ள **மார்கழிப் பெருவிழா**, வருடவருடமாய் தொடர வேண்டும். தேவர்களும் வந்து தொழும் சிவனின் ஆதிரை நன்னாளை அடிப்படையாக கொண்டு, **“ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்”** என்று சேந்தனார் திருப்பல்லாண்டில் பாடிய வண்ணம், இந்த சிவபூமியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து, பாரார் தொல்புகழ் பாடி ஆட வேண்டும் என்பதே எம் பெருங்கனவு! அது நனவாக அவன் அருள்பொலியும் பார்வை கிடைக்க வேண்டி விரும்பிப் பணிகின்றோம்.

**“முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும பெற்றியனே”** என்கிறார் மாணிக்கவாசகர். பழமையும் புதுமையுமாக நின்று அருளும் இறைவன் பெருங்கருணை வாய்த்ததாலேயே, இந்தப் புதுமைகள் மிளிரும் ஆண்டிலும், இந்த மார்கழிப் பெருவிழா சாத்தியமானது என்பதே சத்தியம்! **“இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும்”** ஈசன் பெரும்புகழை எமை அடுத்து வரும் சந்ததிக்கும் சொல்லிக் கொடுத்தும், தமிழ்வழிபாட்டு நடைமுறைகளை பயிற்றுவித்தும், இந்த மண்மேல் அவர்கள் நல்ல வண்ணம் வாழ்ந்த படியே இறைபணி இயற்ற, தென்னாடு செந்தமிழாகம சிவமடம் எடுக்கும் முயற்சிகளுக்கு முத்தாய்பாய், இந்த மார்கழி பெருவிழா முத்திரை கொடுக்கும் என்பதே எம் அனைவரதும் பெரும் எதிர்பார்ப்பாகும்.

பரவியுள்ள தீநுண்மிப் பெருந்தொற்றிலிருந்து எம்மை தற்காக்கும் முன்னாய்த்த சுகாதார நடைமுறைகளோடு டிசம்பர் 25, 26 ஆம் திகதிகளில் காலை மாலை அமர்வுகளாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறப்போகும், இந்த மார்கழிப் பெருவிழாவிற்கு மெய்யன்பர்களையும், சைவத்தமிழ் நல்லுறவுகளையும் இருகரம் நீட்டி வரவேற்று நிற்கின்றோம்!.

தமிழகத்தின் தலைசிறந்த ஆன்மீகப் பேச்சாளர் போற்றுதற்குரிய சொ. சொ.மீ சுந்தரம் ஐயா அவர்களின் வருகையும் ஆன்மீகப் பேருரைகளும் திருமுறைத்த தீந்தமிழ் இசையோடு இசை அரங்கமும் நிகழ்வைச் சிறப்புச் செய்யக் காத்திருக்கின்றன! சைவ நன்னெறி தாம் தழைத்து ஓங்க நாடு நலம் பெற்றுச் சிறக்க இந்த மார்கழிப் பெருவிழா முதற்கல்லாய் அமைய வேண்டி அடியார் தம்மையும், அடியார் உள்ளத்துள் ஒளியாகி நின்று அருளும் இறையனார் பெருங்கருணையையும் மீண்டும் மீண்டும் அகத்திலிருத்தி சைவர்கள் எல்லோரும் இவ்விழாச் சிறக்க வணங்குவோமாக!

**“வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலேரெம்பாவாய்”**

**திருச்சிற்றம்பலம்**

# குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் செந்தமிழில் மூத்த பிள்ளையார் முதனிலை வேள்வி



**“திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.”**

கொரோனாத் தொற்று முற்றுமுழுதாக நீங்கி நாட்டு மக்கள் அனைவரும் நலம்பெற, இறையருள் வேண்டி, யாழ்.குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில், கொக்குவில் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் அர்ச்சகர்களினால் செந்தமிழாகம முறையில், மூத்த பிள்ளையார் முதனிலை வேள்வி (கணபதி வேள்வி),



சென்ற கார்த்திகைத் திங்கள் 23ம் நாள் (09.12.2021) செம்மைமிகு முறையில் நடைபெற்று முடிந்தது.

இந்நிகழ்வானது காலை 08 மணியளவில் பிள்ளையார் பெருங்கதை விரத இறுதிநாளை முன்னிட்டுப் பெருங்கதைப் படிப்புப் பூர்த்தி நிகழ்வு இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து செந்தமிழ் ஆகம மூத்த பிள்ளையார் முதனிலை வேள்வியும் இடம்பெற்றது.

கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் குருமார்களான சிவத்திரு. குருநாதர் உமையொருசிவம் நிகரிலரசு, சிவத்திரு. உயிரொளிசிவம் சிவநாதன், சிவத்திரு. அவிரொளிசிவம் உமைகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு செந்தமிழ் ஆகம மூத்த பிள்ளையார் முதனிலை வேள்வியை குப்பிளான் மண்ணிலே முதன்முதலில் சிறப்புற நிகழ்த்தினர். நல்லை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமச்சாரிய சுவாமிகள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு அருளாசியுரை வழங்கியமை சிறப்பம்சமாகும்.

கணபதி வேள்வியைத் தொடர்ந்து, தெய்வத் தமிழிலே விநாயகப் பெருமானுக்கு திருமஞ்சனப் பூசை வழிபாடும், திருத்தாண்டாகப் போற்றி அர்ச்சனையுடன் சிறப்பு பூசையும் நடைபெற்றது. சிவலிங்கப் பெருமானுக்கும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அமுதும் செய்விக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

இதேவேளை, மேற்படி நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் குருமார்கள், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் மேலாளர் தென்னாடு நிலவன், குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் எஸ்.சிறீதரன், குப்பிழான் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத் தலைவரும், குப்பிழான் தெற்குப் பகுதியின் முன்னாள் கிராம சேவையாளருமான சோ.பரமநாதன் மற்றும் கிராமத்து அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இது, சைவமும் தமிழும் தளைத்தோங்கச் செய்யவதற்கு, தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றியின் முதல்படியாகும். இதுபோல் பலபடிகள் ஏறி, சிவபூமியாம் இலங்கைத் திருநாட்டில், மீண்டும் தெய்வத்தமிழ் மரபு தனித்துவம் பெற்று விளங்க, கொக்குவில் பதியில் உறைகின்ற ஐம்பூதநாதாப் பெருமான் திருவருள் கைகூடட்டும்.

**தென்னாடுடைய சிவனேப் போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

ஆக்கம் - சிவத்திரு செ. ரவிசாந் - Jaffna vision
தொகுப்பு - சிவத்திரு தென்னாடு நிலவன்

# அறிவியல் தத்துவ நோக்கில் அம்பலத்தாடுவான்


உத்தரகோசமங்கை மரகத நடராசர்

ஆதியும் அந்தமும் இல்லாத சோதியான இறைவன் உயிர்கள் மீதுற்ற அளவில்லாத அன்பினால் அவற்றை கடைத்தேற்றும் பொருட்டு, தன்னுடைய நிலையினின்று நீக்கி, வைதோரையும் வாழ வைப்பதற்காக ஒன்றாய் அரும்பி, பலவடிவங்களாக விரிந்து நிற்கின்றான். அத்தகு வடிவங்களில் சைவத்தமிழின் அடையாளமாய் அகிலமெங்கும் வியாபித்துள்ள வடிவம் நடராசர் வடிவம் ஆகும்


ஆலவாய் அமுதன்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுமாய் விளங்கி உலகினை படைத்து, காத்து, ஒடுக்கி வினைகளை மறைத்ததால் நுகர்விக்கச் செய்து ஈற்றில் உயிர்கட்கு அருளவுஞ் செய்பவனாக நடராசர் திகழ்வதை திருமந்திரம்

**"அரந்துடி தோற்றம், அமைத்தல் திதியாம்**
**அரள் அங்கி தன்னில் அறையிற்சங் காரம்**
**அரனுந் றணைப்பில் அருமருந் திரோதாயி**
**அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே"** என வெளிப்படுத்தி நிற்கிறது.

நடராச வடிவம் பல தத்துவங்களை உணர்த்துகின்ற தத்துவார்த்த உருவமாக மிளிர்கிறது. உண்மை விளக்க பகுதியில் இடம்பெறுகின்ற,

**"மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலஞ்**
**சாய அமுக்கி அருள்தானெடுத்து- நேயத்தால்**
**ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல்**
**தானெத்தை யார் பாதந்தான்"**

பாடலில் இறைவன் துடியை இசைக்கும் போது ஆன்மாக்களின் மாயையை உதறுகிறான். ஏந்திய மழுவாகிய கன்ம மலத்தை சுட்டு, முயலகன் மீது ஊன்றிய பாதத்தால் ஆணவமலத்தை அழித்து, தேய்வித்து துக்கிய திருவடியால் உயிர்களை பிறவிக்கடலில் இருந்து மீட்டு, தன் அபயகரத்தினால் மோட்ச இன்பத்தில் திளைக்கச் செய்வதாக குறிப்பிடுகின்றது. சிவனின் திருநடனமானது ஐந்தொழில்களை ஆற்றும் தத்துவார்த்த உரு என்பதை மனவாசங்கடந்தார் தன்பாடலில் வெளிப்படுத்தியுள்ளார்.

**"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்**
**சாற்றி இடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்று மலர்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி**
**நான்ற மலர்பதத்தே நாடு"**

திருமந்திரத்தில் ஈசனின் திருக்கூத்து ஐந்தொழில் ஆற்றும் அருட்கூத்து எனும் படியாக

**"ஆன தொழில் அருளால் ஐந்தொழில் செய்தே**
**தேன்மொழி பாகன் திருநடம் ஆடுமே"**
திருமூலர் பாடியுள்ளார்.

இறைவனின் நடனமானது அவனுடைய ஐந்தெழுத்து வடிவம் என்றும் மந்திர உருவாக ஈசன் விளங்குவதோடு ஐந்தெழுத்தும் அம்பலத்தாடுவோனும் ஒன்றன்றி வேறில்லை என்பதை உண்மை விளக்கம்



**"ஆடும்படி கேள் நல் அம்பலத்தான் ஐயனே**
**நாடும் திருவடியிலே நகரம் - கூடு**
**மகரம் உதரம் வளர்தோள் சிகரம்**
**மருமுகம் வாமுடியப்பார்"**

நடராசனின் திருவடி நகரமாயும்(ந), வயிறு மகரமாயும்(ம), திருத்தோல் சிகரமாயும்(சி), திருவதனம் வகரமாயும்(வ) திருமுடி யகரமாயும்(ய) கொண்டு நாட்டியமாடுவதை குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது.

தத்துவார்த்த உருவாக மட்டுமன்றி அறிவியலின் உருவமாயும் நடராசன் உருவம் திகழ்கிறது. குறிப்பாக ஜெனிவாவில் உள்ள CERN எனப்படும் அணு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடராசரின் சிலை வைக்கப்பட்டுள்ளமை பலரின் கவனத்தை ஈர்த்திருந்தது.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமே அனுத் துணிக்கையின் சேர்க்கையினாலேயே உருவாக்கப்பட்டுள்து. அனுக்களின் சேருதலாலும், பிரிதலாலும், ஒன்றோடு ஒன்றுடனான இடைத்தொடர்பினாலும் அணுத்துணிக்கைகளானவை நகர்ந்த வண்ணமே இருக்கும் என்பதால் அணுக்களின் அசைவானது அணுத்துகள்கள் நடனம் என அழைக்கப்படுகிறது. இவ் அணுத்துகள் நடனத்தை உருவகப்படுத்தும் வண்ணமாய் ஆடவல்லான் திருவுரு அமைவதால் 2004ம் ஆண்டு இந்திய அரசு நடேசர் சிலையை தெரிவு செய்து ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் இணையத்தளம் கருத்துரைத்துள்ளது. இதை மேலும் ஆதாரப்படுத்துவதாக நடராசர் சிலையின் கீழ் உள்ள பீடத்தில் முனைவர் FRITIJOFCAPRA வின் செய்தி அமைகிறது.


**"நூற்றுக்கணக்கான வருடங்கட்கு முன்பே இந்திய கலைஞர்கள் சிவனின் நடனக்கோலத்தை வெண்கலத்தில் வடிவமைத்துள்ளனர். நம்முடைய காலத்தில் இயற்பியல் வல்லுனர்களால் இப் பிரபஞ்ச நடனத்தை வருணித்துள்ளோம்."**

இதை விடவும் ஆச்சரியமான விடையம் யாதெனில் ஊநுசுே எனப்படும் அணு ஆராய்ச்சி நிலையத்தில் அணுக்கருவினுள்ளே உள்ள புரோத்திரன் நியுத்திரன் முதலியவை குவார்க் (QUARKS ) எனும் கூறுகளால் ஆக்கப்பட்டிருக்கும். இவை பற்றி அறிவதற்காக துரிதப்படுத்தி (ACCELERATEOR) எனும் கருவிப் பொறிமுறையே உருவாக்கியுள்ளனர். இம்முறையினுள் அணுத்துகள்கள் மோத விடப்படுவதால் பல புதிய அணுக்கள் உருவாக்கப்படுவதோடு சில பழைய அணுக்கள் அழிக்கப்படுகின்றன. ஆடுகின்ற சிவ பெருமானின் ஆனந்த தாண்டவமும், உருத்திர தாண்டவமும் பிரபஞ்சத்தின் தேற்றுவாய்க்கும் ஈற்றில் ஊழியாய் முடிவுக்கும் வழிவகுக்கும் தன்மையோடு ஒத்துப்போகின்றது.

எனவே இற்றைக்கும், ஏழேழு, பிறவிக்கும் மருந்தாகி கலைமகள் வீணைமீட்ட, நந்தி மத்தளம் கொட்ட, குழலிசை மாயோன் இசைக்க, சிவகாமி நட்டுவாங்கமிட, சர்வத்தை காக்கும் சடைப்பெருமான் அம்பரத்தில் ஆடுங்கூத்தை அறிவியலோடு போற்றுவோம்.

**'ஞானக்கரும்பின் தெளிவைப் பாகை நாடற்**
**கரிய நலத்தை நந்தாத்**
**தேனைப் பழச்சுவை யாயினானைச் சித்தம்**
**புகுந்து தித்திக்கவல்ல**
**கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட**
**கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்**
**பானற் றடங்கண் மடந்தை நல்லீர் பாடிப்**
**பொற்சுண்ணம் இடித்துநாமே"**
-திருவாசகம்

**திருச்சிற்றம்பலம்**




சிவசிவ
திருச்சிற்றம்பலம்

## மார்கழிப் பெருவிழா

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக் கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்த திருவருள் கைகூடியுள்ளது.

### மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை (டிசம்பர் 25)

**அப்பர் சுவாமிகள் அமர்வு**



**காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை**

**யாழ்ப்பாணம் இந்து கல்லூரி**
**ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை**

**துவக்க உரை :** சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
(நிறுவுனர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)

**தலைமை உரை :** பேராசிரியர்.சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா
(துணை வேந்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

**திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்):** சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்

**தொண்டு நெறி:** தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா

**அடியார் தமக்கு அமுது செய்வித்தல்:** மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**சம்பந்தர் சுவாமிகள் அமர்வு**



**மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை**

**தலைமை உரை :** சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம்
(முதன்மை ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்)

**திருமுறை விண்ணப்பம் (சம்பந்தர் தேவாரம்) :** கலாநிதி. திருமதி.சுகன்யா, அரவிந்தன் குழுவினர்

**மகன்மை நெறி:** தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா

**அடியார் பெருமை:** ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு

**நன்றியுரை :** சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன்
(பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

சிவசிவ
திருச்சிற்றம்பலம்

### மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 26)

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு**



**காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை**

**யாழ்ப்பாணம் இந்து கல்லூரி**
**ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை**

**துவக்க உரை :** சிவத்திரு.ஜெயபாலன் தவேதன்
(ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

**தலைமை உரை:** சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன்
(செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்)

**திருமுறை விண்ணப்பம்** (சுந்தரர் தேவாரம்) - சிவத்திரு சிவநாதன் பிரதீபன்

**தோழமை நெறி:** தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா

**அடியார் தமக்கு அமுது செய்வித்தல் :** மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு**



**மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை**

**தலைமை உரை** - சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன்
(அரசாங்க அதிபர் - யாழ் மாவட்டம்)

**திருமுறை விண்ணப்பம் ( திருவாசகம் )** - சிவத்திரு பத்மநாதன் சிவமைந்தன்

**அன்பு நெறி** - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா

**கௌரவிப்பு நிகழ்வு-** தொகுப்பு சிவத்திரு.தில்லையம்பலம் கௌரீசன்
(பொருளாளர் - சைவ மாணவர் சபை)

**நன்றியுரை** - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)



**அணிசெய் இசைக் கலைஞர்கள்**

**மிருதங்கம்** - சிவத்திரு மகேந்திரன் லோகேந்திரன்
**வயலின்-** சிவத்திரு கேதீஸ்வரன் வேலதீபன்
**புல்லாங்குழல்** - சிவத்திரு.கமலநாதன் தேசிகன்
**முகர்சங்கு** - சிவத்திரு. கந்தசாமி நந்தகுமார்

**நிகழ்ச்சித் தொகுப்பு:** சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

**தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 221 2739 / 075 653 3111**

## ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### ஆதிரைப் பெருவிழாவும் ஆதிரை அருட்காட்சியும்

அத்துடன் கொக்குவில் தென்னாடு அருள் மிகு ஐம்பூதநாதர் திருக்கோயிலிலும் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

மார்கழி திருவாதிரை நாளில் சிதம்பரத்தில் தம் திருநடனக் காட்சியை சிவபெருமான், பதஞ்சலி முனிவருக்கு காட்டி அருளினார். ஈசன் தன்னுடைய ஆனந்தத் தாண்டவத்தை காட்டி அருளிய நாளே ஆதிரை அருட்காட்சி நாள் என்று போற்றப்படுகிறது. இந்த ஆதிரை அருட்காட்சியானது தற்போழுது உலகிலுள்ள சிவன்கோயில்கள் அனைத்திலும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

அந்தவகையில் கபாலீச்சரம் அமர்ந்த பெருமானின் ஆதிரைநாள்அருட்காட்சியை பார்க்காமல் போனாயோ என்று சம்பந்தப் பெருமான் தேவாரம் பாடி பூம்பாவையை உயிர்ப்பித்தார்.

**ஊர்திரை வேலை உலாவும் உயர்மலைக்**
**கூர்தரு வேல்வல்லார் கோற்றங் கோள் சேரிதனில்**
**கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியார் பூம்பாவாய்**

### திருவாதிரைக் களி:

திருவாதிரைக்கு ஒருவாய்க்களி என்பது பழமொழி. எனவேதான் மார்கழி திருவாதிரை அன்று விரதம் உள்ள பக்தர்கள் அன்று ஒரு வாய்களி உண்டு மகிழ்கின்றனர. இதே திருவாதிரை நாளன்று ஒருவாய் களி தின்றால், அதன்பலன் அளவிடற்கரியது. திருவாதிரை விரதம் இருப்பவர்கள் களி செய்து படைக்கும் வரை வெறும் வயிற்றுடன் தியானிப்பதோடு, சிவன் கோயிலுக்குச் சென்று நடேசரைத் தரிசித்து வருவது சிறப்பு.

### உத்தரகோசமங்கையில் ஆதிரை அருட்காட்சி

மற்றய கோயில்களில் நடைபெறும் ஆதிரை அருட்காட்சியை விட இங்கு நடை பெறும் விழா அதிமுக்கியத்துவம் பெறக் காரணம், இக்கோயிலில் இருக்கும் பச்சை மரகத நடேசர் சிலை தான். பச்சை மரகதக் கல்லில் 6 அடியில், ஒரு காலை படமெடுத்து ஆடும் நாகத்தின் தலை மேல் வைத்தபடியும், ஒற்றைக் காலை தூக்கி நடனமாடும் கோலத்தில் உருவாக்கப்பட்ட இந்த சிலை தான் உலகில் உருவான முதல் நடேசர் சிலையாகும்.

இந்தச் சிலையானது முழுவதும் மரகதக் கல்லால் ஆனதால், எந்நேரமும் அக்கல்லில் இருந்து வெப்பம் வெளியேறிக் கொண்டேயிருக்கும் என்பதாலும் மற்றும் சிறு ஒலி அதிர்வுகளால் மரகதச்சிலைக்கு சேதாரம் ஏற்படும் என்ற காரணத்தினாலும், ஆண்டு முழுவதும் மரகத நடராசர் சிலையின் மீது சந்தனக் காப்பு பூசப்பட்டிருக்கும்.

ஆண்டுக்கு ஒரு நாள் மட்டும், அதாவது மார்கழித் திருவாதிரை நாண்மீனுடன் கூடிய நாளில் நடைபெறும் ஆதிரை அருட்காட்சி நாளுக்கு முதல் நாள் மட்டுமே, நடராசர் மேல் பூசப்பட்டிருக்கும் சந்தனக் காப்பு களையப்பட்டு சுவாமிக்கு திருமஞ்சனம் நடைபெறும். பின்னர் மீண்டும் சந்தனக்காப்பு அணிவிக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டு அடியவர்களுக்கு அதிரைக்காட்சி அளிப்பர் உத்தரகோசமங்கை மரகத நடராசர். இது இம்முறை மார்கழி 4ம் நாள் (டிசம்பர் 19) நடைபெறும்.

### மார்கழிப் பெருவிழா

இப்படிபட்ட சிறப்பான தெய்வீக மார்கழி மாதம் முழுவதுமே விழாவாகக் கொண்டாடப்படவேண்டும். ஆதிரையானின் புகழினை தினமும் பேசவேண்டும். இசை நிகழ்வுகள், தொடர் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், பூசைகள், வழிபாடுகள் என்று கிராமங்கள் மற்றும் நகரங்கள் தோறும் சைவநெறியின் பெருமைகள் பேசப்படவேண்டும். இதனை சைவ அமைப்புகள் முன்னின்று நடாத்த வேண்டும். மார்கழி மாதம் சைவர்களின் வாழ்வியலும் வழிபாடும் இரண்டறக்கலக்கும் அருள்மிகு மாதம். இதனைக் கருத்தில் கொண்டு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மார்கழிப் பெருவிழா எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக ஒழுங்குபடுத்தியுள்ளனர். இது ஆண்டுதோறும் பெருவிழாவாக நடைபெற எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதனாதப் பெருமான் துணைநிற்பாராக.

**சிவத்திரு. திருவம்பலம் தென்னவன்**
**நிறுவுனர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
**கொக்குவில் - யாழ்ப்பாணம்**

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

**(சித்தானைக் குட்டி சுவாமிகள் சென்ற திங்கள்த் தொடர்ச்சி)**

1949ஆம் வருடம் சித்திரைத் திங்கள் என்று நினைவு. காலஞ்சென்ற கவிஞர் பரமஹம்சதாசனாருடன் விபுலானந்த சுவாமிகளைத் தந்த காரைதீவுக்குச் சென்றிருந்தேன். கண்ணகி அம்மன் கோயில் வழிபாட்டை முடித்து விட்டு ஆசிரியர் தங்கராஜா அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தோம். அங்கு சித்தானைக் குட்டி சுவாமிகளைப் பற்றிய பேச்சு வந்தது. என்னுடன் கூட இருந்தவர்கள் அத்தனைபேரும் சுவாமிகளைப் பலமுறை வழிபட்டவர்கள். நான் ஒருவன் மாத்திரமே அப்பாக்கியத்தைப் பெறாதவனாக இருந்தேன். சுவாமிகளுடைய பேச்சு வந்ததும் உடனேயே நான் சென்று வழிபாடு செய்ய வேண்டுமெனப் பெரிதும் விரும்பினேன். அங்கிருந்தவர்கள், பலமுறை அருள் பெற்றவர்களான படியினால் போலும் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் அடுத்தநாள் காலையில் போகலாம் என்றார்கள். நானோ உடனே போக வேண்டும் என்று பிடிவாதமாக நின்றேன்.

எனது ஆர்வத்தைக் கண்டு, சுவாமிகளிடம் என்னை அழைத்துச் சென்றனர். நாங்கள் நால்வர் சென்றதாக நினைவு. நாங்கள் சுவாமிகளிடம் சென்ற போது நன்றாக இருட்டிவிட்டது. சுவாமிகள் குடியிருந்த வீட்டின் முன்பக்கச் சுவரில் கறுப்பு எழுத்துகளினால் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**“ஸ்ரீஆ.சி.சித்தானைக்குட்டி சுவாமிகள்
கண்டி, இந்தியா இராமநாதபுரம் சமஸ்தானம், காரைதீவு, மட்டக்களப்பு, சிலோன்.”**

உள்ளே சென்றோம். சுவாமிகள் மௌனமாக இருந்தார்கள். அவர் முன்னிலையில் பத்துப் பன்னிரண்டு பேர்கள் கண்மூடித் தியானத்திலிருந்தார்கள். நாமும் சென்று வீழ்ந்து வணங்கி எழுந்தபோது சுவாமிகள் கைதூக்கி ஆசி வழங்கினார்கள். நாமும் சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்தோம். ரமணமாமுனிவர் திருச்சமூகத்தில் இருக்கும்போது ஏற்பட்ட ஒரு உள்ளுணர்வு, சுவாமிகளுடைய திருச்சமூகத்திலும் ஏற்பட்டது.




அதனால் அடிக்கடி சுவாமிகளுடைய அருளைப் பெற்று, எமது உள்ளுணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்த நேரத்தில் ஒரு எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் தோன்றியவாறே மறைந்தும் விட்டது. சுவாமிகள் சரியாக மூன்று வருடங்களில் சமாதி அடைந்து விட்டார்கள் என்பதைக் கேள்வியுற்ற போதுதான் எனது சோம்பலை நினைந்து வருந்தினேன். உரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டேனே என்று இன்றும் நினைந்து வருந்துகின்றேன். அதற்குப் பரிகாரமாகவே சுவாமிகளுடைய திருச்சரிதத்தை எழுதும் வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று அதனை நினைந்து நினைந்து உள்ளம் உருகுகின்றேன்.

### சித்தானைப் பெயர் தரும் கருத்து.

சுவரில் எழுதிய வசனங்களின் காரண கருத்தை விளங்கிக்கொள்ள ஆசைப்பட்டேன். பலரும் பலவிதமாக உரைத்தனர். இந்த விலாசத்தை யாரோ ஒரு மகான்தான் எழுதிச் சென்றுள்ளார் என ஒரு அன்பர் கூறினார். சித்தானைக் குட்டிசுவாமிகள் சொல்லச் சொல்ல எழுதப்பட்ட வாக்கியங்கள் அல்ல. வந்தவருடைய உள்ளுணர்வில் தோன்றியவாறே எழுதிச் சென்றுள்ளாராம். இதனைப்பற்றிச் சுவாமிகளிடம் ஒரு அன்பர் வினவியபோது எழுதியவனிடம்தான் பொருள் கேட்க வேண்டுமென்று கூறினார்களாம்.

சுவாமியவர்கள் யார்? ஏன் இங்குற்றார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்பன போன்ற வினாக்களுக்குச் சரியான விடையாக அமைந்திருப்பவையே அந்த வாசகங்கள் என்பது ஆசிரியர் எதிர்மன்னசிங்கம் அவர்களுடைய அபிப்பிராயமாகும். ஆசிரியர் எதிர்மன்னசிங்கம் அவர்கள் 1930-ஆம் வருடம் மார்கழித் திங்களில் தொடங்கி, 1940-ஆம் வருடம் மார்கழித் திங்கள் வரை உள்ள பத்து வருட காலமும் சுவாமிகளோடு நெருங்கிப் பழகி, உடன் உறைந்து பல உண்மைகளை அனுபவத்தில் பெற்றுக்கொண்ட பாக்கியசாலி ஆவர்.

சுவாமிகளின் முழுப்பெயரையும் விலாசத்தையும் அவை குறிப்பனவாக இருந்தன. இப்போது அவ்வீடு அழிந்து போனமையினால் அவ்வாசகங்களைக் காணமுடியவில்லை. அதை ஒருமுறையேனும் பார்த்தவர்களுடைய உள்ளத்தில் அது நீங்கா இடம்பெற்றிருக்கும் என்பதில் யாதோர் சந்தேகமும் இல்லை.

ஆ என்பது ஆனைமுகன், ஆறுமுகன் இருவரையும் சி என்பது சிவத்தையும் குறிக்கின்றன. ஆனைக்குட்டிச் சித்தரின் ஞானப் புதல்வன் சித்தானைக்குட்டிச் சுவாமிகள். ஆகவே ஆ.சி.என்பது ஆனைக்குட்டிச் சுவாமிகளைக் குறிக்கும் என்பர். இன்னும் ஆதிசிவனையும் ஆனைசிவனையும் குறிக்கும் என்றும் கூறுவர். பெரிய ஆனைக்குட்டியின் குட்டி சித்தானை, ஆனைக்குட்டி சுவாமிகளின் ஞானப்புதல்வன் என்பதையே சித்தானை என்னும் சொல் குறிக்கிறது. சித்தானை என்ற பெயரை குருநாதராகிய பெரிய ஆனைக்குட்டி சுவாமிகளே தமது சீடருக்குச் சூட்டினார்கள்.

கண்டி என்ற சொல் இன்று பட்டினத்தைக் குறிக்கின்றது. முன்னொருகாலம் கண்டி இராச்சியத்தைக் குறித்தது. அதற்கு முன்பு மாகாணத்தையும் குறித்து நின்றது. வெகுகாலத்திற்கு முன்பு இலங்கையைக் கண்டி என்றே அழைத்து வந்தார்கள். இன்றும் இந்தியாவிலுள்ளவர்கள் இலங்கையைக் கொழும்பு என்று அழைப்பதைப் பார்க்கிறோம். “கண்டிக் கதிர்காம வேலோனே” என்ற பாடலில் கண்டி என்பது இலங்கையையே குறிக்கின்றது. ‘கந்த’ என்ற சிங்களச் சொல் மலையைக் குறிப்பது. கந்த என்ற சொல்லே கண்டி என மருவி நின்றது எனவும் கூறுவர்.

முன்னேசுவரம் கோயிலில் இருந்து சாதனை புரிந்த சித்தானைக்குட்டி சுவாமிகளுக்குக் குருநாதன் பேரொளியாகக் காட்சி கொடுத்தான். குருநாதருடைய சமாதி கைகூடிவிட்டது என்பதை உணர்ந்த சுவாமிகள் குருநாதனுடைய சமாதியில் 40 நாட்கள் இருந்தார்கள். குருநாதனுடைய கட்டளையை எதிர்பார்த்து 40 நாட்கள் கடுந்தவம் ஆற்றினார்கள். நாற்பதாம் நாள் கனவில் நவநாதசித்தரின் சமாதிக்குச்செல் என்ற கட்டளை பிறந்தது. சுவாமிகள் உடனேயே புறப்பட்டு விட்டார்கள்.

கையிலோ பணம் இல்லை. கால்நடையாகவே பிரயாணத்தை ஆரம்பித்தார்கள். வழிநடந்த அலுப்பு ஒருபக்கம் பசி இன்னொரு பக்கம் கண்வருத்தம் பிறிதோர் பக்கம். இந்த நிலையில் ஒரு கடைப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அக்கடை ஒரு சிங்களவருடையது. சுவாமிகள் ஒரு திருடராய் இருக்கக்கூடுமென்று கடைக்காரர் சந்தேகித்தார். அதை உணர்ந்த சுவாமிகள் அவ்விடத்தை விட்டு நீங்கினார்கள். இந்த நிலையில் சாராயம் குடிக்க வேண்டும் என்ற ஒரு ஆசை பிறந்தது. ஆசை வளர்ந்து கொண்டே வந்தது. குருநாதனைக் கருத்தில் நினைந்தார். கோபித்தார். சாராயம் குடிக்க ஒரு வழி ஏற்படாதா என்று தமக்குள்ளேயே கர்ச்சித்தார். திடீரென வழியை உற்று நோக்கினார். கைக்குட்டை ஒன்றில் முடிந்தபடி 10 ரூபா கிடந்தது. குனிந்து எடுத்தார். குருநாதனைக் கோபித்தது பற்றி மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். அவ்வழியிலே பெண்கள் பலர் தண்ணீர் எடுப்பதற்காகப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். இடைவிடாது பலர் நடமாடித் திரிந்தனர். இத்தனை பேருடைய கண்ணிலும் சிக்காது அந்தப் பத்து ரூபா சுவாமிகளுடைய கண்ணிலே தென்பட்டதுதான் அற்புதத்திலும் அற்புதமாகும்.

அப்பணத்தைக் கையில் எடுத்ததும் நடை வேகம் அதிகரித்தது. சாராயத் தவறணை ஒன்று கண்ணுக்குத் தென்பட்டது. அங்கு சென்றார். போதிய அளவு சாராயம் குடித்தார். புதிய தென்பு ஏற்பட்டு விட்டது. மேலும் வேகமாக நடக்கத் தொடங்கினார். நேரம் இருண்டு கொண்டு வந்தது. எதிரே ஒரு P.W.D. ஓவசியர் வீடு தென்பட்டது. அங்கே போனார். அவர் ஒரு யாழ்ப்பாணத்தவர். சுவாமிகளை அன்புடன் வரவேற்று உபசரித்து அன்றிரவு தங்குவதற்கேற்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தார். சுவாமிகளுடைய கண்ணுக்கு மருந்து கட்டி அது மாறும் வரைக்கும் தம்மோடே வைத்துக் கொண்டார். சுவாமிகளுக்கு நல்ல சுகம் வரும்வரை ஊணும் உடையும் கொடுத்துப் பராமரித்தார். கண்ணோய் நன்றாக மாறியபின் நாவலப்பிட்டிக்குச் சென்றார். அங்கிருந்து குயீன்ஸ்பரி போய்ச் சேர்ந்தார்.

### குயீன்ஸ்பரியில் சித்தானைசுவாமிகள்

நவநாதசித்தர் சமாதியாவதற்கு முன்பு பெருமாள் அம்மையாரிடம் சித்தானைக்குட்டி சுவாமிகள் இங்கு வரக்கூடும் என்று கூறியிருந்தார்கள். அம்மையார் சுவாமிகளைப்பற்றி அறிய ஆவல் கொண்டு அவர் எப்படி இருப்பார் என்று கேட்டார். அதற்கு நவநாதசித்தர், **“அவர் ஒரு காலை நொண்டிக் கொள்வார். அம்மா தர்மம் என்று கேட்பார், அவர்தான் எல்லாச் செல்வங்களும் நிறைந்த கப்பல். ஆனால் பெண்ணுக்கும் கேட்பார். தம்மை மறைத்துக் கொள்வதற்காகவே அங்ஙனம் பேசுவார். நீங்கள் மாத்திரம் அதிலே மயங்கி ஏமாந்துவிடக் கூடாது. அவரைப் பார்த்த உடனேயே உங்கள் உள்ளத்திலே இவர்தான் சித்தானைக்குட்டி சுவாமிகள் என்று தெரிந்து கொள்வீர்கள்”** என்றார். இந்தக் குறிப்புகள் எல்லாம் அம்மையாரின் மனத்திலே ஓர் உருவத்தைக் கொடுத்துப் பதிந்து கொண்டன.



குயீன்ஸ்பரி சென்று சேர்ந்த சுவாமிகள் நேராக நவநாத சித்தரின் சமாதிக்குச் சென்றார்கள். முருகப்பெருமானுக்கு வணக்கம் செலுத்தியபின் சித்தருடைய சமாதிக்கு முன்பு வந்து தியானத்தில் அமர்ந்தார்கள். பக்கத்திலே ஓம் என்ற ஒலியுடன் அருவி நீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. இயற்கை அன்னையின் அரவணைப்பிலே தியானம் உடனே கைகூடிற்று. பல மணித்தியாலங்கள் சுவாமிகள் தம்மை மறந்து ஆனந்த நிலையிலே காணப்பட்டார்கள். தோட்டத்து மக்களில் சிலர் சுவாமிகளைச் சுற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். சுவாமிகள் கண்விழித்தார்கள். **‘நவநாதா’** என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்கள். **‘நவநாதா’** என்ற ஒலியைக் கேட்டதும் சூழ நின்றவர்கள் எல்லோரும் மந்திரத்தால் கட்டுப்பட்டவர் போலாயினர். இன்றும் அத்தோட்டத்து மக்களுடைய நாவிலே நவநாதருடைய திருப்பெயர் ஒலித்துக் கொண்டே இருப்பதைக் காணலாம். **‘எதற்குக் கட்டுப்படாதவர்களும் நவநாதருடைய நாமத்தைக் கேட்டவுடன் அதற்குக் கட்டுப்பட்டு விடுவார்கள்.’**

சுற்றி நின்ற தொழிலாளர்களில் ஒருவர் சாமி கங்காணி அம்மா உங்களைச் சாப்பாட்டிற்கு அழைப்பதற்குக் காத்துக் கொண்டிருப்பார்கள். கெதியாகப் போங்கள் என்று கூறியதோடு, தானே கூட்டிச் சென்று வீட்டில் விடுவதாகவும் கூறினார். தொழிலாளி தூரத்தில் நின்றே வீட்டைக் காட்டிவிட்டுத் தன்பாட்டில் போய்விட்டார். பெருமாள் அம்மாவின் வீடடைந்த சுவாமிகள் “அம்மா தர்மம்” என்று குரல் கொடுத்தார்கள். வீட்டினுள் இருந்த அம்மையாரின் காதில் இச்சத்தம் கணீரென்று விழுந்தது. எப்பொழுதோ கேட்டகுரல் மாதிரி ஒரு பிரமை.

அம்மையார் சத்தம் கேட்டதும் கதவைத் திறந்து வெளியே வந்தார்கள். சுவாமிகளின் திருத்தோற்றத்தைக் கண்டதுமே ஆளைப் புரிந்து கொண்டார்கள். சுவாமிகளின் வருகைக்காக இங்கு எவ்வளவு காலம் காத்துக் கிடக்கிறேன். உள்ளே வாருங்கள் சுவாமி என்று அழைத்து சுவாமிகளின் பாதம் விளக்கி பூ எடுத்து அர்ச்சித்து யான் செய்த தவம் இன்றுதான் பலித்தது. நவநாதப் பெருமானின் வார்த்தை இன்றுதான் கைகூடியது என்றெல்லாம் கூறினார்கள். சுவாமிகளுடைய பசியைப் போக்கி சுவாமிகளுக்கு வேண்டிய உபசரணைகளை எல்லாம் குறைவறச் செய்து வந்தார்கள். அம்மையாரின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லாருமே சுவாமிகளிடம் பெரிய வாரப்பாடுடையவர்களாக விளங்கினார்கள். சுவாமிகளுக்கு என்னென்ன தேவையோ அத்தனையையும் அக்குடும்பத்தினர் மனமுவந்து நிறைவேற்றினர். சுவாமிகள் நவநாதருடைய சமாதியிலும், நவநாத சுவாமிகள் தவம் செய்த வனத்திலும் மாறிமாறி நிட்டை கூடி இருந்தார்கள்.

நவநாதசித்தருடைய சமாதி முருகன் சந்நிதியிலும் பெரிய ஆனையின் சமாதி விநாயகப் பெருமான் சந்நிதியிலும் அமைந்துள்ளதைச் சித்தானைக்குட்டி சுவாமிகள் எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தார்கள்.

**வடக்கே கடையிற் குருநாதனும் மேற்கே ஆனைகுரு நாதனும் தெற்கே நவநாதசித்தரும் சமாதியில் நிலைபெற்றிருப்பதை எண்ணி எண்ணித் தம்மைப் பற்றிக் குருநாதன் கூறிய தீர்க்கதரிசனத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார்கள்.** குருநாதன் கூறிய சமாதிநிலை தமக்குக் கைகூடும் நாள் எந்நாளோ என்று ஏங்கினார்கள்.


**(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)**

திருச்சிற்றம்பலம்

**ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்**

# தீவினை நீக்கும் திருவாதிரை நன்னாள்


சிதம்பரம் நடராசர்


சிவத்திரு
சிவ செந்தமிழாதன்

விழாக்களும் விரதங்களும் நிறைந்துள்ளன. சைவத் தமிழர்களின் வாழ்வியல், பண்ணெடுங்காலமாக பண்பட்டு, செம்மையுற்று, பயணிக்கிறது! சிறந்தே பிறந்த சைவமும் தமிழும், தோன்றிய காலத்தை வரலாற்று ஆய்வாளர்களும், அறிஞர்களும் சரிபடக் கணிக்க இயலாமல் தடுமாறி நிற்பதைக் காண்கின்றோம்! இந்த அறியமுடியாத ஆதியைக் கொண்ட பண்பாட்டின் ஆதியாக சித்தருள் முதற்சித்தராக, பிறப்பும் இறப்பும் அற்ற ஒரு பொருளாக **'சிவம்'** எம்முள்ளும் எமக்கு வெளியேயும் பேரண்டத்திலும் வியாபித்து விரிகின்றது! வெளியே விரியும் சிவத்தை உள்ளே ஒடுக்கும் ஆற்றல் பெற்றவர்களே யோகிகளும் சித்தர்களுமாவார்! அவர்கள் சிற்றின்ப இச்சைகளை நீக்கி பேரின்ப அனுபவங்களோடு வாழும் பெரியவர்கள் அவர்கள் வழியில் சிவத்தை எம்முள்ளே தேடும் முயற்சியே, **"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும்"** விரதங்களாகும்! பலநூறு விரதங்கள் வருடத்தின் ஒவ்வொரு திங்களிலும் வந்தாலும், மார்களித்திங்களில் நாம் தவமியற்ற புண்ணிய காலமாக கொள்ளும். திருவெம்பாவை விரதமும், ஆதிரை நன்னாள் விழாவும் மகத்துவம் மிக்கது!

**"ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்**
**அணியுடை ஆதிரைநாள்**
**நாராயணனொடு நான்முகன் அங்கி**
**இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர் குழாங்கள்**
**திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்**
**பல்லாண்டு கூறுதுமே!"** என்கின்றார் சேந்தனார்.

தேவர்களுக்கெல்லாம் மனிதர்கள் விழாக்கொள்ளுவதும், வேள்வி செய்தலும் இயல்பு! அவ்வாறே தேவர்கள் எல்லோருக்கும் தம் பரம்பொருளாகிய சிவனின் விழாவைக் கொண்டாடி மகிழும் திறனும் வாய்த்தது! தேவர்க்கும் தேவனாகிய இறைவனின் ஆதிரை நன்னாள் காண, எல்லாத் தேவர்களும் அவன் புகழ் பாடி கூத்தும் ஆடி, விரைந்து வந்தனர் என்பதில் இருந்தே நாம் உணர்ந்து தெளிவோம்.

எம்வாழ்வியலோடு ஒன்றித்த எந்த விரதங்களும் கொண்டிராத தெளிவான, பத்தி இலக்கிய ஆதாரங்களை திருவாதிரை விரதம். கொண்டிருக்கும் பாங்கு அதன் வரலாற்றுக் தொன்மையை எமக்கு எடுத்தியம்புகின்றது! சங்கப்பாடல்கள் 'தை நீராடல்' என்று பதிவு செய்தாலும் கூட, அது மார்கழித் திங்களில் நிறைமதியில் ஆரம்பிக்கும் நீராட்டு மறு திங்களாகிய தைத்திங்கள் நிறைமதி வரை தொடர்ந்திருக்க வேண்டும் என்றும், அது ஒரு திங்களில் இருந்து மறு திங்கள் நிறைமதி வரை நீண்ட பெருவிழா என்றும் சைவ சமய ஆய்வாளர்கள் கூறுவர். அது நிற்கவும். திருவாதவூரடிகள் (மணிவாசகசுவாமிகள்) **'திருவெம்பாவை'** என்றும், அப்பர் பெருமானோ, ஆரூர் திருப்பதிகமாகவும் திருவாதிரைப் பெருவிழாவை வரலாற்றுச் சான்றுகளோடு முன்வைக்கின்றார்!.

**"குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்,**
**பிணங்கித் தம்மிற் பித்தரைப்போல பிதற்றுவார்,**
**வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்,**
**அணங்கன் ஆகும் ஆதிரை நாளால் அதுவண்ணம்"**

என்று அப்பர் பெருமான் பத்துப்பாடல்கள் மூலம் ஆதிரை நாளின் சிறப்பு எங்கனம் இருந்தது என்பதை மனமுருகி எம் மனக்கண்களுக்குள் திரையெழுப்பிக் காட்டுவார்! வேதமுதல்வனாகிய இறைவனிடத்தில் ஞானம் பெற்ற, திருஞானசம்பந்தர்.

**"ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்**
**கூர்தரு வேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்**
**கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாய்"**

தன் திருவாய் மலர்ந்து அருளி, சாம்பலில் இருந்து பூம்பாவைக்கு உயிர்கொடுத்த வரலாற்றை உயர்வோடு பேசுகையில் அங்கும் ஆதிரை நாளுக்கான சான்றும், அதன் மகத்துவமும் எம் கண்களுக்கு முன்னே விரிகின்றது!

சிவனுக்குரிய நாண்மீனான திருவாதிரை, ஆதிமுதல் நாண்மீன் என்று வானியல் ஆய்வாளர் சொல்லுவார்கள், அந்த நாண்மீன் மார்கழி நாளில் கூடும் போது ஆதிரை நாள் நீராட்டு, அண்டத்தின் இயக்கத்துக்கு அடிநாதமாக விளங்கும் நடராசருக்கு இடம்பெறுதல் தனிச்சிறப்பேயாகும், ஈழத்திலும், காரைநகர் சிவாலயமாகிய ஈழத்துச் சிதம்பரம் முதலாய கோயில்கள் தோறும் பல்லாயிரம் அடியவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய அந்த நீராடல் இடம்பெறும் பத்துநாட்கள் விரதமாக கொள்ளப்படுகின்ற இத்திருவாதிரை விரதம், நிறைவில் விழாக்கோலம் பூண்டு, இறைவர்க்கு திருமுழுக்கு இடம்பெறும் பாங்கு அருட்சிறப்பு மிக்கது!

வரலாற்றுச் சான்றுகளதும், இலக்கிய ஆதாரங்களதும் அடிப்படையில், சைவத்தமிழர்களின் ஆதி விரதமாக இருக்கின்ற ஆதிரை விரதம், குறிப்பாக பெண்கள் போற்றி வழிபட்டதையும், பத்து நாட்கள் அவர்கள் விரதமிருந்து அதிகாலையில் துயில் நீங்கி, பனி, குளிரினை பொருட்படுத்தாது, தம் தோழியரை உடன் அழைத்துக்கொண்டு நீராடச் சென்று, பின் இறைவனின் புகழைப்பாடி உய்வு கொண்டனர்.

**"மாதர்கொள் மாதரெல்லாம்**
**மார்கழித் திங்கள் தன்னில்**
**ஆதிரை முன் ஈரைந்தே**
**ஆகிய தினங்களில் தம்மில்**
**மேதகு மனைகள் தோறும்**
**அழைத்திருள் விடிவதான**
**போதிவர் தம்மிற் கூடிப்**
**புனற்றடம் ஆடல் செய்வர்"**

என்று திருவாதவூரடிகள் புராணத்திலே கடவுள் மாமுனிவரும் சான்று செய்கின்றார்! திருவெம்பாவை நோன்பு என்பது, மகளிரின் ஆரோக்கியம் சார்ந்தும், அதிகாலை துயிலெழும்பி கோயில் செல்கின்ற, மனப்பாங்கினூடாக ஒரு புத்துணர்வான நாளை உருவாக்கும், குளிர்ந்த நீரில் நீராடுவது, அவர்களின் கருவளத்தை காக்கின்ற செயற்பாடாகவும். அமைந்து விளங்குகின்றது! இவ்விரதம் சிவனுக்குரியதாக இருந்தாலும், சிவன் தன் பெருங் கருணையினால், அது மகளிர்க்கும், உலகின் பிற உயிர்களுக்குமானதாக செய்தருளினார்!

நோய்கள் உடலை ஆட்கொள்வதும் தன் பரம்பரையைப் பெருக்க இயலாமல், மலட்டுத்தன்மை கொள்வதும், எம் முன்னைத் தீவினைப் பயன்கள் என்று நாம் எண்ணினால், அத்தீவினைப் பலன்கள் நீக்கி விட நல்வினை தரவல்ல நாதனாகிய இறைவனை, ஆதிரைக்கு முன்னரான பத்து நாட்கள் விரதமிருந்து செந் தமிழால் வழிபடுதல் உத்தமமாகும்! இதன் காரணத்தாலே தான் திரு வெம்பாவைப் பாடல்களும், சிவனின் சத்திவடிவமாகிய திருமாலின் மீது ஆண்டாள் பாடிய பாவைப்பாடல்களும், மக்களுக்கான பாடல்களாக , எளிமைப்படுத்தப்பட்ட பாடல்களாக அமைந்து சிறக்கின்றது!

**"நாயிற்யடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்**
**தாயிற் பெரிதுந் தயவுடைய தம்பெருமான்**
**மாயப் பிறப்பறுத்துத் தாண்டானென் வல்வினையின்**
**வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ"** என்கின்றார் திருவாதவூரடிகள்!

நாயினும் கடைப்பட்ட எம்மீதும், இறைவன் தாயினைப்போல தயவு கொண்டு, இந்த மாயப்பிறவியில் இருந்து நாம் விடுபட்டு வல்வினைகள் நீங்குவதற்காகவே அருளினான், அவன் புகழ்பாடியவாறே பூக்களை கொய்யுங்கள் என்று அவர் அறிவுறுத்துகின்றார்!

ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் சிவனுக்குத் தனிச்சிறப்பான பெயர்கள் உண்டு! இந்த ஆதிரை நன்னாளும், மார்கழியில் வருவதனால், மார்கழியின் வைகறைப்பொழுதில் நாமும், தேவர்கள் தம் நாளின் வைகறைப்பொழுதாகிய மார்கழி முழுவதும் இறைவழிபாடு இயற்றும் செய்தி காலம் தோறும் கடத்தப்பட்டு, வழிபடப்பட்டு, கையளிக்கப்பட்ட செய்தியாகும்! தென்னகத்தின் சிதம்பரத்திலும், திருவாரூரிலும் நடராசருக்கு செய்யப்படும் வழிபாடுகளையும், திருத்தேரில் நடராசர் வீதியுலா வருவதையும் கண்கொள்ளாக் காட்சி என்று பலரும் வியந்து போற்றுவர்!

தாருகா வனத்து முனிவர்கள் மாயையால் சிக்குண்டு, தமக்கு ஆதாரமான சிவனை மதிக்காது சிவனை விட தாம் உயர்ந்தவர்கள் என்றும், தம் வேத வேள்வியே சிறந்தது என்று எண்ணி, ஒரு பெரு வேள்வி செய்து, மத யானை ஒன்றை சிவனை அழிக்க ஏவியதாகவும், அந்த மதயானையைக் கொன்று அதன் தேலினை சிவன் தன் போர்வையாக்கியதாகவும், இறுதியில் முயலகன் என்ற கணத்தை ஏவியதாகவும் அதனை எம்பெருமான் தன் காலடியில் போட்டு இடக்காலைத் தூக்கி நடனம் ஆடியதாகவும், அந்த நடனத் திருகாட்சியே, திருவாதிரை அருட்காட்சி என்றும், சமயவாதிகள் பழம்செய்தியொன்றையும் பகிர்வார்!

ஆணவத்தின் வடிவமாகிய, அறியாமையின் உருவமாகிய முயலகனை அறிவுப் பிழம்பாகிய சிவபெருமான் தன் காலடியில் மிதிப்பதாகக் காட்டுவது அருட்குறிப்பேயாகும். அத்துடன் முயலகன் என்பது ஒருவித வலிப்பு நோயையும் குறிக்கும் சொல்லாகிறது எனவே எல்லா நோய்துன்பங்களில் இருந்தும் நம்மைக் காத்து நிற்பான் இறைவன் என்பதை திருவாதிரை அருட்காட்சி உணர்த்துகின்றது! திருவாதிரை விரதம் என்பது ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது! உள்ளத்துத் துய்மையையும் உடல்த்தூ ய்மையையும் வலியுறுத்துவது! அதனால் தான் உடலை தூய்மை செய்யும் நீராடலையும், உள்ளத்தை தூய்மை செய்யும் இறை வழிபாட்டையும் மலர்பறிக்கும் போதே இறைவனின் புகழைப்பாட வேண்டும் என்ற சிந்தனையும் சிறந்தது எனலாம் திருவாதிரை நாளில் இறை அமுதாக, உழுந்திலே செய்த களியை அடியவர்களுக்கு வழங்குவார்.

**'திருவாதிரைக்கு ஒரு வாய்க்களி'** என்ற சொல்லாடல் தமிழகத்தில் இருப்பதைக் காண்கின்றோம்! உடலுக்கு சத்தியை வழங்கவல்ல உழுந்திலே களிசெய்து அதனை, உட்கொள்வது, நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் செயலேயாகும்! எனவே, சமயமும் வாழ்வும், சேர்ந்து தவமாக வரும் திருவாதிரை விரதத்தின் தனிச்சிறப்பை நாம் உணர்தல் நன்று. மற்றய தேவர்களுக்கும், கடவுளர்களுக்கும் கைக்கொள்ளும் எல்லா விரதங்களினதும் ஒருமித்த பலனை தந்து, எம் முன்வினைகளை நீக்கி பிறப்பிலாப் பெருவாழ்வை தரும் சிறப்பு இவ்விரதத்திற்கு உண்டு!

விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும், அண்டத்தின் பெருவெடிப்பு நிகழ்ந்து பூமண்டலமும், பால் வீதிகளும் தோன்றிய போதே, திருவாதிரை நாண்மீன் கூட்டமும் தோன்றியது என்பர் ஆதியில் தோன்றியதாலேயே **'ஆதிரை'** என்ற பெயர் பெற்றதாகவும், அதனாலையே சிவனுக்குரிய தானது என்றும் கூறுவார்கள்! உலகம் தோன்றியபோது தோன்றிய நாண்மீன் தொகுதி என்றும் அது தோன்றிய உலகில் உயிர்ப்பின் ஓசையே கேட்காத காலம் என்றும் கொள்ளலாம். அதன் காரணத்தாலும் ஆதிமுதல்வனாகிய சிவனுக்கு இவ் நாண்மீனை உரியதாக்கினர். எனவே உயிர்கள் எல்லாவற்றிற்கும் மூலமும் முதலுமான, சிவனை நினைந்து கைக்கொள்ளும் ஆதிரைநாள் விரதம் இருந்து தீவினைகளைக் களைவோமாக!

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரியபுராணம்:
# அன்பர் வேடமே சிந்தை செய்வார் - மெய்ப்பொருள் நாயனார்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உலகுக்கு உயிராய் உவட்டாதத் தேனாய் அடியார் மனதில் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். அனைத்து உயிர்களும் என்றாவது பேரின்ப நிலையை அடைய வேண்டும் என பரம்பொருள் கருணைகொண்டு நம்மிடையே உலாவிக் கொண்டிருக்கிறான். இதனை மாணிக்கவாசகர் **"தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே"** என்பார்.

ஒருபோதும் அரன் நம்மை ஏற்றத்தாழ்வுகளுடன் நடத்துவதில்லை. எல்லோர்க்கும் பொதுவாகத்தான் இருந்து அருள் செய்கிறான். எனவேதான் அவனை **"சலமிலன்"** என்பர். அப்பேற்பட்ட சிவபெருமானுக்கு மெய்த்தொண்டு புரிந்து சிவபுரியில் சேர்ந்த அன்பர்கள் பலர். அதில் முதன்மை யானவர்கள், அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவார். அடியாரின் தோற்றமே ஆண்டவனிடம் சேர்க்கும் என்பது ஆன்றோர் வாக்கு. அடியார்களை வணங்கினால் ஆண்டவனை எளிதில் பிடித்து விடலாம் என்பது திண்ணம்.

அப்படி அடியார் வேடமிட்டு வந்த பாதகனையும் பாதுகாத்து அனுப்பிய பண்பாளராகத் திகழ்ந்தவர், பொய்ப்பொருளை வேண்டாத மெய்ப்பொருள் நாயனார். அவர் மெய்ப்பொருளாகக் கண்டதும், ஏற்றதும் அடியார் வேடத்தையே.



நீதியின் மிக்கது சேதி நாடு. அந்நாட்டு தலைநகர் திருக்கோயிலூர், அரனின் எண்ம வீரட்டத் தலங்களில் ஒன்றாகும். அப்பதியிலே அரனார் அடியார்கட்கு என்றும் காதலுடன் கருத்து அறிந்து ஏவல் புரிவார். அரசியல் நெறியில் வந்த அறநெறி வழுவாதவர் மெய்ப்பொருள் நாயனார் ஆவார். வாள்வலியாலும் தோள்வலியாலும் சிறந்தவர். எதிர்த்த பகைவர்களை வென்று வாகை மாலை சூடுவார். நடேசப் பெருமானுடைய திருவடியை நாடுவார். உரை திறம்பாத ஒரு நெறியில் மனம் வைத்தவர். சிவனடியார் திருவேடத்தையே பொருளாகக் கொண்டவர்.

அடியார்களுக்கு அவர் எப்படி தொண்டு புரிந்தார் என்பதை கீழ்வரும் பெரியபுராணப் பாடல் சிறப்பாக எடுத்துக் கூறும்.

**"தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்**
**ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகுமென்று**
**நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்தபோது**
**கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக்கொடுத்து வந்தவர்"**

தீவினை விட்டு ஈட்டிய பொன்னையும் பொருளையும் அம்பலவாணரது அடியார்க்கே உரியனவாகும் என்று எண்ணிய உள்ளத்தோடும், அடியார்க்கு ஒரு சிறிதும் குறைவற்ற அன்புடன் வேண்டுவன தந்து அன்பு செய்வார். நாம் பிறருக்கு உதவும்போது அன்புடன் செய்ய வேண்டும். அன்பின்றி செய்வது சிறப்பற்றதாகும். உள்ளும் புறமும் அன்பு பொங்க உதவும்போது, பெறுகிறவர்களுக்கு உள்ளும் புறமும் மகிழ்ச்சிப் பொங்கும். அதில்தான் இறைவனும் மகிழ்வார். எனவே அன்பின்வழி நின்று தொண்டு புரிய வேண்டும்.

ஆரம் கண்டிகை ஆடை கந்தையே என சிந்தையை சிவனுக்கே என்று ஒப்புவித்த ஒப்பற்ற அடியார் வேடத்தையே விரும்பிய மெய்ப்பொருள் நாயனாருக்கு புறப்பகைக் கொண்டவனாய் ஒருவன் இருந்தான். அவனே முத்தியை விரும்பா முத்தநாதன். பலமுறை அடியாரிடம் தோற்றுப் போனதால், சூழ்ச்சியால் வெல்ல எண்ணினான். அதற்கு அவன் தேர்ந்தெடுத்த திட்டம், அடியார் வேடமிட்டு சென்று, கொன்று வெற்றி கொள்ள வேண்டும் என்பதாகும்.

முத்தநாதன் அடியார் வேடத்தை மெய்ப்பொருள் நாயனாரின் பலவீனமாகக் கருதினான். ஆனால் அதுதான் அடியார்க்கு வீடு பேற்றைத்தரும் பெரும்பொருள் என்பதை அவன் அறியாமையினால் அறிந்திருக்கவில்லை. முத்தநாதன் எப்படி அரசர் கோயிலுக்குள் சென்றான் என்பதை தெய்வச் சேக்கிழார் பெருமான்,

**"மெய் எல்லாம் நீறு பூசி வேணிகள் முடித்துக்கட்டி**
**கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி**
**மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்புவைத்து**
**பொய்த்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்"**

எந்த எந்த அங்கங்களில் எவ்வாறு எவ்வாறு திருநீறு புனைய வேண்டுமோ அந்த முறைமையின்றி, உடம்பெல்லாம் திருநீறு பூசினான். சடைகளை முடித்துக் கட்டினான். வாளை ஆடையில் மறைத்து புத்தகம் போல் கட்டி ஏந்திக்கொண்டு, மையினை உள்ளே பொதிந்து வைத்து வெளியே ஒளி செய்யும் விளக்கேயென்று சொல்லும்படி, மனத்திலே வஞ்சனையை வைத்துத் தவவேடம்போல் பொய்வேடம் பூண்டு வந்தான்.

அடியார் வேடமிட்டு வந்ததால் அரண்மனைக்குள் எளிதாக நுழைந்து அரசனின் பள்ளியறை வாயிலை அடைந்தான். அங்கு தத்தன் என்ற ஓர் அறிவின்மிக்க காவலன் நிற்கிறான். பொய்வேடதாரியை மெய்க்காப்பாளன் தத்தன் கண்டு, ஐயுற்று தடுத்து இடைமறித்தான். எனினும் மீறி உள்சென்றான் எத்தன். மன்னர் உறக்கத்திலிருந்து எழுந்து பணிந்தார்.

நாயனார் மிகுந்த அன்புடன் வரவேற்று இன்னுரை தந்தார். பரமசிவத்தினிடம் அன்பில்லாத அவன் **'நமது நாயகன்'** என்னாது, **"உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமம்"** என்கின்றான். **"மண்மேல் எங்கும் இல்லாதது ஒன்று கொடுவந்தேன் இயம்ப"** என்றான். இந்த வஞ்சனை எங்கும் இல்லாததன்றோ?

**"நாறுபூங் கோதை மாதுந்தவிரவே நானும் நீயும் வேறிடத். திருக்க வேண்டும்"** என்றான் முத்தநாதன். மலர்முடித்த கூந்தலையுடைய அரசமாதேவி விலக வேண்டும். நீயும் நானும் தனித்திருக்க வேண்டும், என்பது அதன்பொருள். அன்றியும் 'அரசமாதேவி இனி மலர் முடித்தலை நீங்கக் கொல்லவந்த என்னைக் கும்பிடும் நீ சிவலோகமும், கும்பிடுகின்ற உன்னைக் கொல்லும் நான் நரகலோகமும் சென்று, இப்போது ஒன்றாக உள்ள நாம் மேலும் கீழுமாக வேறு லோகங்களிற்குப் போக வேண்டும்' என்ற பொருளும் அதற்குள் அமைந்திருப்பதைக் காண்க. (வாரியார் சுவாமிகளின் பெரியபுராண விளக்க நூல்)

அம்மையார் அகல, அரசர் தொழும்போது முத்தநாதன்



வாளையெடுத்தான். அடியார்கள் மீது சேக்கிழார் பெருமானுக்கு உள்ள அளவற்ற அன்பு காரணமாகக் கொன்றான் என்று கூறாமல், "நினைந்த அப்பரிசே செய்ய" என்று கூறும் தன்மையும் உள்ளத்தையும் உருக்குகின்றது. வெளிப்படையாகப் பார்த்தால், நாயனாரைக் கொன்று வென்றதாகத் தோன்றும். ஊன்றி நோக்கினால் கொல்ல வாளெடுத்த போதும் வேடமே மெய்ப்பொருள் என்று தொழுதபடியால் வென்றது மெய்ப்பொருளேயாவார்.

**"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்"** மனம் அங்கு வைத்த தத்தன் விரைந்து உள்புகுந்து முத்தநாதனை வாளினால் வெட்ட ஓங்கினான். குருதி சோர விழுகின்ற சமயத்தில் **"தத்தா நமர்"** என்று தடுத்தார். அவருடைய அன்பின் ஆழம் இங்கேதான் அதிகமாகக் காணப்படுகிறது. தத்தன் அரசரின் ஆணைக்காய் நின்றான். **"இவரை இடையூறின்றி வெளிப்படுத்து"** என்றார் மன்னர். முத்தநாதனை கொல்ல முயன்ற அனைவரையும் தடுத்து, தத்தன் ஊர் கடந்து விடுத்து வந்தான். அவன் வரும்வரை அரசர் உயிர் தரித்திருக்கிறார். தத்தன் மீண்டுவந்து **"இடையூறின்றி விடுத்தேன்"** என்றான். அது கேட்ட அரசர் அளவற்ற மகிழ்ச்சியடைந்து, **" இன்றெனக் கையன் செய்தது யார் செய்ய வல்லார்"** என்கின்றார். இதனால் அவருக்குத் தவ வேடத்தின் மீது இருந்த அன்பு இமையமலையினும் உயர்ந்ததென்று விளங்குகின்றது.

இவ்வளவு சிறப்புமிகுந்த மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றின் ஊடாக நாம் அறிந்து, தெரிந்து, புரிந்து கொண்டு நடக்க வேண்டியவைகளாக உள்ளவை

1. அடியார் வேடத்தை வணங்குவது.
2. அடியாரை தொழுதல் போன்றவையாகும்.

சிவவேடத்தை விடவும் உயிர் பெரிதல்ல என மெய்ப்பித்துக்காட்டிய மெய்ப்பொருள் நாயனாரை வணங்கும் நாம், அவ்வேடம் ஏற்று, அரனைத் தொழும் நாம் பொறுப்புணர்ந்து தொண்டாற்ற வேண்டும். சிவவேடத்தின் மாண்பை காப்பவர்களாகத் திகழ வேண்டும்.

**திருச்சிற்றம்பலம்**



# சிவபூமியில் சிவனைத் தேடி - திருகோணமலை திருக்கரசையில் நாகர் அமைத்த, திருக்கரசையம்பதி திருமங்கலாய் சிவன்கோயில்





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

### திருகோணமலை

கிழக்கிலங்கையில் சைவப்பூமியின் மகுடமாகப் போற்றப்படும் திருகோணமலை மாவட்டம், பாரததேசத்து புராண இதிகாசக் கதை வரலாறுகளிலும், தேவாரப்பாடல்களிலும், குளக்கோட்டன், கஜபாகு ஆகிய மாமன்னர்களின் திருப்பணிகளிலும் புகழ்ந்து பேசப்படும் புண்ணிய பூமியாகும். **'தமிழ்விரகர்'** என்று சிறப்பிக்கப்படும் திருஞானசம்பந்தக் குரவரால் **"குரைகடலோத நித்திலம் கொழிக்கும்"** என்றும், **"குடிதனை நெருக்கி பெருக்கமாய் தோன்றும்"** என்றும், **"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த"** என்றும் கோணமாமலையான் பள்ளி கொள்ளும் திருவூர் என்றும் சைவ உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த பேறுபெற்றேகிய சுவாமிமலை திருகோணமலையாகும்.

திருகோணமலை மாவட்டம் மிகக் குறுகிய நிலப்பரப்பைக் கொண்டது. ஐரோப்பியர் ஆவணங்களின்படி, அது நான்கு வன்னிப் பிரிவுகளாக நிர்வாக ரீதியில் இயங்கிவந்தாலும், இந் நான்கு பிரிவுகளும் பற்றுக்கள், தேசங்கள் என்று சுட்டப்பட்டு வந்துள்ளன. அவை திருகோணமலைப்பற்று, கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று, தம்பலகாமப்பற்று என்பனவாகும். இப்பற்றுக்களில் சைவமும் தமிழும் தளைத்தோங்கும் முகமாக பத்துக்கு மேற்பட்ட சிவன் கோயில்கள் காணப்படுகின்றமையே இத்தேசத்தைச் சிவபூமி என்று போற்றுவதற்குத் தக்க சான்றாகும். அதேவேளை தேசத்துக் கோயிலின் உற்பத்தி மரபொன்று திருக் கோணேசுவரம், வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் என்பவற்றோடும் தொடங்குவதும் கவனிக்கத்தக்கது.

### திருவூர்ச் சிறப்பு

திருக்கோணேச்சரத்தை அதிகார மையமாகக் கொண்டு விளங்கியது கொட்டியாபுரப்பற்று ஆகும். இப்பற்று மகாவலி ஆற்றினாலும், அதனால் வளம் பெற்ற இயற்கையான காடுகளாலும், வன விலங்குகளாலும் சூழப்பெற்ற பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் சிவன்கோயில்கள் பல இருந்ததாகவும், அகத்திய மாமுனிவர் நிலைப்படுத்திய சிவலிங்கம் இருந்ததாகவும், தவம், பூசை, தைத்த திங்களில் புண்ணிய தீர்த்தமாடுதல், ஆடிமறைமதியில் தீர்த்தமாடி வழிபடுதல் மற்றும் தமிழ்க் குறுநில மன்னர்கள், குறிப்பாக மணிணாகன் பரம்பரை இருந்ததாகவும், அங்கு கிடைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்களும், பல தொல்பொருட்சின்னங்களும், தற்போது பதிப்புவடிவில் இருக்கின்ற திருக்கரைசைப்புராண இலக்கியமும் பல வரலாற்றுச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கின்றன.

திருகோணமலையின் கொட்டியாபுரப்பற்றிலுள்ள கிளிவெட்டியிலிருந்து சுமார் 8 கிலோமீற்றர் தூரத்தில் நடுவனத்தில் குடிகளின் புழக்கம் இன்றி அமைதியான சூழலில் திருமங்கலாய் சிவன் கோயில் அமைந்துள்ளது. கங்குவேலிச் சிவன் கோயிலின் வரலாற்றில் இக்கோயிலுக்குச் செல்லும் காட்டுவழிப்பாதையொன்றும் கூறப்பட்டுள்ளது. தேவாரப்பாடல் பெற்ற திருக்கோணேசுவரம், திருக்கேதீச்சுவரம் ஆகிய தலங்களுக்கு முன்பே திருமங்கலாயின் திருக்கரசை எனும் இடத்திலுள்ள சிவாலயங்கள் சுமார் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தொல்பொருட்சின்னங்களைக் கொண்டமைந்தது என்று பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் 'இலங்கைத் தமிழர் வரலாறு கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### திருக்கோயில்ச் சிறப்பு

இந்த சிவன்கோயில் பற்றி திருமலைப்பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் சிறு கட்டுரையாக்கம் ஒன்றைச் செய்துள்ளனர். அவர்களில் பண்டிதர் இ. வடிவேல் எழுதிய 'திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள்' என்ற நூலில் திருமங்கலாய் சிவன் கோயில் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**"தற்போது இந்த ஆலயம் அழிந்த நிலையில் இருக்கின்றது. கருப்பக்கிருகம் சிதைந்துவிட்டது. அர்த்தமண்டபம் சிதைத்த நிலையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபமும், மற்றும் ஆலயக்கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன."**

மேலும் அவர் இங்குள்ள திருமங்கலாய் சிவனின் பெயர் கந்தலிங்கேசுவரர் என்றும் மகாவலி ஆற்றில் ஆடிமறை மதியிலும், தைத் திங்களிலும் தீர்த்தமாடி வழிபட்டு, திருக்கரைசைப்புராணப்படிப்பும் நடைபெற்று வந்ததென்றும், மகாவலி ஆற்றின் பெருக்கால் இக்கோயில் அழிந்து காடாகி மூடிவிட்டது என்றும், இங்குள்ள திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர் திருமலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி அ. ஸதீஸ்குமார். அவர்கள் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் வைரவிழா மலரில், பண்டிதர் இ. வடிவேல் ஐயாவின் குறிப்புக்களை ஆதாரம் காட்டி இக்கோயில் ஆய்வு செய்யப்பட வேண்டும். மீள்வழிபாடு செய்யும் பொருட்டு புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற ஆவலை முன்வைத்திருந்தார்.

இத்தலத்தைப் பற்றிய ஓர் புதிய அத்தியாய வரலாற்றைத் தொல்லியல் ஆய்வுகள் மூலம் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் **" இலங்கைத் தமிழர் வரவாறு- கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்"** என்ற நூலில் 'திருக்கரசையில் நாகர் அமைத்த கோயில்' என்ற தலைப்பில் தன் ஆய்வு அனுபவ ஆக்கத்தினை எழுதியுள்ளார். இதுவரைகாலம் இத்தலம் பற்றிய தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் இவருடைய ஆய்வுகளினாலும், பேராசிரியர் தமிழர் மீதும் சைவத்தின் மீதும் கொண்ட பேரார்வத்தாலும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பழமைக் குடிகள் என்று கூறப்படும் நாகர் வம்சத்தினர் வாழ்ந்த இடமாக திருக்கரசை விளங்கியுள்ளது. அதுமட்டுமன்றி அவர்கள் மிகுந்த பலமும் வளமும், சமயப்பற்றும் கொண்டவர்களாக பல தலைமுறைகளாக ஆட்சிபுரிந்துள்ளார்கள் என்பது அங்கு கிடைத்துள்ள ஏராளமான தொல்பொருட்சின்னங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருக்கரசையில் சிவன்கோயில் உருவாக்கப்படுவதற்கு முன்பு, நாகவழிபாட்டுத் தலம் ஒன்று இருந்தமையை அங்கு கிடைத்துள்ள நாகவழிபாட்டுச் சின்னங்கள் மூலமாக அறியமுடிகின்றது. இதே போல நாகர்கள் ஆட்சிபுரிந்த அம்பாறை (காரைதீவு), கந்தரோடை, மாவிட்டபுரம் போன்ற இடங்களில் காணப்படும் நாகச்சின்னாங்களும் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

திருக்கரசையில் கிடைத்துள்ள வெள்ளை நிறமான அரைவட்டக் கல்லில் 'மணிணாகன் பள்ளி' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. **"அது கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கு உரியது என்றும், நாகர் திருக்கரசையில் அமைத்த சிவன் கோயிலுக்குரியது என்றும் கொள்ளலாம்"** என்று பேராசிரியர் குறிப்படுகின்றார். இங்கு 'மணிணாகன்' என்ற பெயர் சைவசமயக் கடவுளின் பெயராகவும், அதேவேளை நாக மன்னர்களுக்குச் சூட்டப்பட்ட பெயராகவும் இருந்துள்ளது. இதற்குச் சான்றாக அக்காட்டினுள் மறைந்து கிடக்கின்ற கோயிலின் இடிபாடுகளுடைய பல வகையான தூண்கள் காணப்படுகின்றன. அவற்றின் சில தூண்களில் சிவனின் திரிசூலக் குறி பொறிக்கப்பட்டுள்ளது. மற்றும் இன்னுமோர் துணொன்றில் மூன்று நாக மன்னர்களின் பட்டப் பெயர்கள் **"வேள்ணாகனின் மகன் வேள் கண்ணன், வேள் கண்ணனின் மகன் வேள் நாகன்"** என்று குறிப்பிடப்படுவதில் இருந்து நாகமன்னர்களுக்கும் சைவத்துக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதை அறிந்து கொள்வதோடு திருக்கரசையில் உருவான சிவன் கோயில் அவர்களால் உருவாக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்துள்ளது என்பதையும் உணர முடிகின்றது. இவ்விபரங்களை பேராசிரியர் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**"சிவாலயம் அமைக்கப்படுவதற்கு முன்பு திருக்கரசை நாக வழிபாட்டுத் தலமாக விளங்கியதென்று கொள்ளமுடிகின்றது. நாக வழிபாட்டுச் சின்னங்களான கற்கள் சிலவும் இங்கு கிடைத்துள்ளன. ஆதியில் நாகவழிபாட்டினரான நாகர் காலப்போக்கில் சைவசமயத்தைப் பின்பற்ற முற்பட்டமைக்கும் இங்குள்ள தொல்லியற்சான்றுகள் ஆதாரமாகும். இருப்பினும் சைவசமயக் கடவுளரை அவர்கள் மணிணாகன் என்ற பெயராற் குறிப்பிட்டமை இவற்றினாற் புலனாகின்றது. இது பொது வழமையாகிவிட்டது என்பதை யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமுள்ள கல்வெட்டுப் பொறித்த பல சின்னங்கள் மூலமாக அறியமுடிகின்றது"**

இங்கு கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்கள் எல்லாம் ஏறத்தாள 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறும் பேராசிரியர், தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட, குறிப்பாக **'மணிணாகன்'** என்னும் பெயர் பொறிக்கப்பட்ட நந்தியின் கல்லுருவம் அங்கு இருந்ததாகவும், அது தற்போது அங்கில்லை என்றும் குறிப்பிடும் அவர், மற்றும் அங்கு கிடைத்துள்ள சிவலிங்க வடிவம் மிகவும் தொன்மையானது அதன் நடுப்பகுதியில் **"மணிணாகன்"** என்ற பெயர் பொறிக்கப்பட்டிருப்பதையும் அவதானித்து, **"தென்னாசியாவிலே கிடைக்கின்ற மிகவும் புராதனமான சிவலிங்கங்களில் இதுவும் ஒன்றாகும்"** என்கின்றார். ஆகவே இங்குள்ள நந்தியும் சிவலிங்கமும் ஒருகாலத்தவை ஆகையால் அவ்விரண்டும் ஒரே கோயிலுக்குரியவை என்றும், தனது நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கோயிலின் உடையாரையும், நந்தியினையும் மணிணாகன் என்று பெயரிட்டுள்ளமை புதுமையானது. இது தென்னிந்தியப் பண்பாட்டு மரபிலும் ஈழத்து சைவசமய வரலாற்றிலும் இதுவரை வெளிவரதை விடயமாகும்."

### திருக்கோயில் வரலாறு

திருகோணமலையின் தலச்சிறப்பினை எடுத்தோதும் புராணங்களில் தட்சிணகைலாச புராணம், திருக்கரசை புராணம், திருகோணாசல புராணம் ஆகிய மூன்றும் தனிச்சிறப்புப் பெற்றவை. இவற்றுள் திருக்கரசை புராணம் திருமங்கலாய் சிவன் மீது பாடப்பட்ட தலமாபுராணமாகும். இதன் நூலாசிரியர் பற்றியும் இது உருவான காலம் பற்றியும் உறுதியாகக் கூறுவதற்கு ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இன்றும் இப்புராணம் கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல சைவக்கோயில்களில் பாராயணம் செய்யப்பட்டும் வருகின்றது. இந்நூல் திருமங்கலாய் சிவன் கோயில் வரலாற்றுடனும், அதன் அருகாமையில் உள்ள அகத்தியர் நிலைப்படுத்திய கோயிலுடனும் தொடர்புபட்டது. இப்புராணத்தில் நான்கு சருக்கங்கள் உள்ளன. கங்கை, தாபனம், பூசை ஆகிய சருக்கங்களிலே சூரியகுலத்தில் உதித்த அயோத்திபுர அரன் சிங்கபுயன் ஈழத்தீவை வந்தடைபோது, அக்காலத்தில் திருமங்கலாயில் இருந்தவாறு ஆட்சி புரிந்த எழில்வேந்தன் எனும் மன்னனின் மகளாகிய திருமங்கை என்பவளை சிங்கபுயன் மணம் முடித்து, இவ்விடத்தையும் ஆட்சிபுரிந்து, இங்கு ஒரு சிவன் கோயிலும் கட்டி பூசை புரிந்து வழிபட்டனர். அதனால் திருமங்கலாய் சிவன் கோயில் என வழங்கப்படலானது. பின்பு அகத்திய முனிவர் அமைத்த கோயிலையும் புதுப்பித்து பூசை புரிந்ததாக கூறப்படுகின்றது.

ஆகவே ஆரம்ப காலத்தில் திருக்கரைசயம் பதியில் இரு சிவன்கோயில்கள் மன்னர் ஆதரவுகளுடன், பூசை வழிபாடுகளுடன், சிறப்புடன் நல்நிலையில் இருந்துள்ளதை அங்கு கிடைத்துள்ள தொல்லியல் கூன்றுகளும், திருக்கரசை புராணமும் எடுத்துக் கூறுகின்றன. இவ்விரு சிவன்கோயில்களும் ஈழத்தின் பழமையானவையாகக் கொள்ளப்படுகின்றன. தற்போது இவ்வாலயத்தின் முழுமையை எம் கண்ணால் கண்டு தரிசிக்க முடியாத அவல நிலைக்குள்ளாகியுள்ளோம். இக்கோயில்கள் முற்றாகச் சிதைவடைந்து அதன் ஏராளமான பாகங்கள் காடாலும் புற்களாலும், மண்ணலும் மூடப்பட்டு மெல்ல மெல்ல இறந்து கொண்டு வருவதை சைவர்கள் யாவரும் உணர வேண்டும். மீண்டும் உயிர்ப்புடன் இக்கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு தமிழ் வேதாகம மந்திரப் பாடல்களோடும் பூசை வழிபாடுகளோடும் சுவாமிமலையில் தளைத்தோங்க திருமலைச் சைவச்சான்றோர்கள், இளைஞர்கள் முன்வரல் வேண்டும்.

இந்நிலையில், திருமலை - உவர்மலை விவேகானந்தா கல்லூரியில், சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் ( கொக்குவில் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினுடைய நிறுவுனர்) அவர்களின் நிதி அன்பளிப்பிலே, 'ஈழத்து உத்தரகோசமங்கை' என்றழைக்கப்படும் அருள்மிகு உவர்மலை மங்களநாதர் திருக்கோயில் (உலகின் முதலாவது சிவன் கோயில் என்று எல்லோராலும் அறியப்பட்ட, தென்னிந்தியாவில் இராமநாதபுரத்திலுள்ள உத்தரகோசமங்கையை ஒத்த அமைப்பை உடையது.) கட்டப்பட்டு, சென்ற கார்த்திகைத் திங்கள் 13ம் நாள் (நவம்பர் 27), சிவத்திரு. குருநாதன் உமையொருசிவம் நிகரிலரசு ஐயா அவர்களினால், திருக்குடமுழுக்குச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது ஆகும். இதில் முக்கியமானது, மங்களநாதர் குடமுழுக்கின் போது, மாணவர்கள்,ஆசிரியர்கள் என 128 பேர் நுழைவு தீக்கை (சமய தீக்கை) பெற்றிருந்தனர். இது திருமலை மண்ணில் சைவத்தமிழ் வாசம் இன்னும் வீசுகின்றது என்பதை பறைசாற்றுகின்றது.

**"மேரு நடுநாடி மிக்கிடை, பிங்கலை
கூறுமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாரும் திலை வனத்து தண்மா மலையத் தூடு
ஏறுஞ் சுழமுனை இவை சிவபூமியே"
(திருமந்திரம். 2701ஆம் பாடல்)**

திருச்சிற்றம்பலம்

# புலம்பெயர் சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களும் வாய்ப்புக்களும்

பாகம் 5





நியூசிலாந்து சிற்சபேசன்

**முற்பகுதிச்சுருக்கம்:** சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வழிபாட்டு முறையே சைவசமயம் என்பதை **“தென்னாடுடைய சிவனே போற்றி”** என்னும் மாணிக்க வாசகரின் வரிகளை மேற்கோள்காட்டி வியாக்கியானம் செய்யப்பட்டது. **“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்”** என்னும் திருமந்திரப்பாடலை ஆதாரமாக்கி சைவசமயம் ஒரு வாழ்க்கைமுறை என்பது பதியப்பட்டது. அந்நியப் படையெடுப்புக்கள், களப்பிரர்கள், பல்லவர்கள் போன்றோரின் வருகை, சமணம்-பௌத்தம் போன்ற பிறசமயப்பரவல், பத்தி இயக்கம், கட்டிடக்கலையில் ஏற்பட்ட திருப்புமுனை என்பவை அலசப்பட்டன. படையெடுப்பின் மூலம் மண்ணைப் பிடிக்க வந்தவர்களை, மண்ணின் மரபுகளை மாற்ற முனைந்தவர்களை சைவசமயம் கையாண்ட பாங்கு விவரிக்கப்பட்டது. **“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்”** என இறைவனுக்கு வரைவிலக்கணம் வகுக்கின்ற பண்பாட்டின் பலம் சுட்டிக் காட்டப்பட்டது. அழிக்க நினைத்தவர்களையும் அரவணைக்கும் சைவசமயத்தின் உள்ளார்ந்த பண்பு அடையாளப்படுத்தப்பட்டது. சைவத்தமிழ்ப் பரப்பிலே ஏற்பட்ட அந்நிய ஆக்கிரமிப்பு, மதமாற்றம் என்பவற்றின் பின்னணிச் சம்பவங்களும், அவற்றினுடைய விளைவுகளும் ஆராயப்பட்டன. புலம்பெயர்ந்த சூழலிலே காணப்படுகின்ற வாய்ப்புக்கள் விவரிக்கப்பட்டன.

புலம்பெயர்ந்தசூழலிலே காணப்படுகின்ற ஆரோக்கியமான புறச்சுழலே சைவசமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களையும், சுயதெரிவின் அடிப்படையில், பின்பற்றுவதற்கான வாய்ப்புக்களை அங்கு உருவாக்குகின்றன. மறுவளத்தில், புலம்பெயர்ந்த சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்கள் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. அகச்சூழல் என்பதே அதற்கான ஒரே பதிலாகும்.

கடந்த அரைநூற்றண்டுக்கு உட்பட்ட காலப் பகுதியிலேயே, மேற்கத்திய தேசங்களிலே, பரவலான கவனத்தைச் சைவசமயம் ஈர்த்திருக்கின்றது. அதற்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் முக்கிய காரணமென்பது மிகையல்ல.

தனித்துவமாக வாழ்ந்த சைவத்தமிழ்ச் சமூகம், ஆக்கிரமிப்புக்களால் சொந்தமண்ணிலே அச்சுறுத்தலுக்குட்பட்டது. மதமாற்றங்களினால் துன்புறுத்தலுக்குட்பட்டது. அதனுடைய வலி தலைமுறைகளைக் கடந்திருக்கின்றது. இன்றும்கூட விடிவு பிறக்கவில்லை. மதமாற்றங்கள் உச்சம் தொடுகின்றன. சைவவழிபாட்டுத்தலங்கள் அரசபலத்துடன் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அதற்கு கதிர்காமம் தரமான ஒரு எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய பின்னணியிலே, சொந்தமண்ணிலிருந்து வேரோடு பெயர்க்கப்பட்டவர்களே புலம்பெயர்ந்தவர்களாகும். வேர்களிலே அதீதமான பிடிமானத்தை அத்தகையோர் கொண்டிருப்பது இயல்பானதாகும். அதனுடைய வெளிப்பாடே மொழி, மதம் சார்ந்த அடையாளங்களில் அவர்கள் கொண்டிருக்கும் அசாதாரணமான பற்றுதலாகும். அதுவே, புலம்பெயர்சூழலிலே சைவசமயம் கவனிக்கப்படக்கூடிய இடத்தை பெறுவதற்கு உந்து சத்தியெனலாம். அங்குள்ள சைவக்கோயில்களின் எண்ணிக்கையே அதற்குச் சாட்சியாகும்.

பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் கணிசமான சைவத்தமிழர் வாழ்கின்றனர். மேற்கத்திய சூழல் பூரணமான மத சுதந்திரத்தைக் கொண்டதாகும். பொது விதிமுறைகளை அனுசரித்து கட்டுமானங்களை முன்னெடுக்கக்கூடிய சூழலாகும். அஃது சைவக்கோயில்களை நிர்மாணிக்கக்கூடிய வாய்ப்பைத் தாராளமாகவே வழங்குகின்றன.

புலம்பெயர்ந்த முதலாம் தலைமுறையினர் ஒன்றிரண்டு சூட்கேசுடன் (பயணப்பொதி) சொந்த மண்ணிலிருந்து புறப்பட்டவர்களாகும். கடின உழைப்பாளிகள். புதிய சூழலிலே அடி அத்திவாரத்திலிருந்து வாழ்கையை கட்டியெழுப்பியவர்களாகும். அத்துடன் சைவக்கோயில்களை நிர்மாணிப்பதற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்குபவர்கள்.

புதிதாக கோயில்கள் அமைப்பது இலேசான பணியல்ல. பரந்துபட்ட சைவச்சமூகத்தினதோ, அல்லது தனிமனிதர்களினதோ நிதி ஆதாரத்தினாலேயே, மேற்கத்திய தேசங்களில் சைவக்கோயில்கள் அமைகின்றன. ஒருகாலத்தில் மன்னர்கள், அமைச்சர்கள், நிலக்கிழார்கள் போன்றோரே கோயில் நிர்மாணப்பணியில் ஈடுபடுவார்கள். அத்தகைய ஒரு பாரிய பணியை புலம்பெயர்ந்த சைவத்தமிழர்கள் முன்னெடுத்துள்ளனர். அதிலும் சைவத்தமிழரின் கணிசமான புலம்பெயர்வு ஐம்பது ஆண்டுகளுக்கு உட்பட்டதாகும். அந்தவகையிலே சைவத்தமிழரின் செயற்பாடு போற்றுதலுக்குரியதாகும்.

சைவத்தமிழ் அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதிலே அதீத அக்கறையை சைவத்தமிழர் கொண்டிருக்கின்றனர். அதேவேளையில், கிரியைத்தன்மையதான புறச்செயற்பாடுகளிலேயே கவனத்தைக் கொண்டிருகின்றனர். அவர்களிடம் இறையியல் பார்வை வலுவற்றதாகவே காணப்படுகின்றது. அதுவே, புலம்பெயர்ந்த சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய சவாலாகும்.

கோயில்கள் அமைப்பது ஆரம்பப் புள்ளியாகும். கோயில்கள் வெறும் கட்டிடங்கள் அல்லவே. அங்கே உயிரோட்டமான நம்பிக்கைகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். அறம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். கூட்டுணர்வு பொங்கிப் பிரவாகிக்க வேண்டும். பிறவுயிரைத் தன்னுயிர் போல் பேணும் மாண்பு வேண்டும். கோயில் பராமரிப்பு இலகுவானதல்ல. கோயில்ப்பொறுப்பாளர் (அறங்காவலர்) என்னும் சொல்லாடலின் கனதி தவ வாழ்கைக்கு அருகானதாகும். அதற்கு இறையியல் தொடர்பிலான கூர்மையான பார்வை அவசியமாகும்.

சைவசமயத்திலே படிநிலைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. “அரிதரிது மானிடர் ஆதல் அரிது” என்கிறார் ஔவைப்பிராட்டியார். அத்தகைய அரிய மானிடப்பிறப்பு இறையருளினால் கிடைப்பதாகவே சைவசமயத்தவரின் நம்பிக்கையாகும். அத்தகைய மானிடப் பிறப்பெடுத்த அனைவரும் இறைவனை வணங்கி, கர்ம வினைகளிலிருந்து விடுதலையாகி, பிறவாப் பேரின்பநிலையை எய்துவதற்கு சைவசமயம் பாதை வகுக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என அழைக்கப்படுகின்றன. அவை சைவ நாற்பாதங்கள் எனப்படுகின்றன. அவற்றின் வழியாக இறைவனைப் பற்றிக்கொண்டு, பிறவிப்பயனை அடையலாம் என சைவசமயம் தெளிவாக வரையறுக்கின்றது.

சரியை முதலாவது படியாகக் கூறப்படுவதாகும். அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் சரியை நெறியாகும். இஃது இலகுவில் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியாகும். “அவனருளாலே




அவன்தாள் வணங்கி” என மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அந்தவகையிலே, சரியைநெறி நின்றொழுகுவதற்கு, தூய்மையான இறைபத்தியூடாகப் பெறக்கூடிய இறையருளும் அவசியமாகும்.

கோயிற்த் தொண்டால் இறைவனை அடைவதை சரியையில் சரியை என்றும், எல்லோருக்கும் எப்போதும் தொண்டு செய்து வாழ்தலை சரியையில் கிரியை என்றும், ஈசனை வணங்கி தியானிக்கும் போது உண்டாகும் ஆன்மபலத்தால் பிற உயிர்களைப் பேணுதலை சரியையில் யோகம் என்றும், ஆழ்ந்த இறைபத்தியால் உண்டாகும் ஞானநிலையில் இறைவனைத் தரிசித்தலை சரியையில் ஞானம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரண்டாவதுபடி, கிரியை நெறியாகும். அவரவர் தம்மளவில் செய்யும் ஆத்மார்த்த பூசையும், பொதுவில் கோயில்களில் செய்யப்படுகின்ற பூசையும் கிரியைநெறியாகச் சொல்லப்படுகின்றன.

மூன்றாவதுபடி யோக நெறியாகும். சரியை, கிரியை நெறிகளுக்கு மேற்பட்டதாக யோகநெறி போற்றப்படுகின்றது. அதிலே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டுப் படிநிலைகள் உள்ளன. மிகக்கடினமான பயிற்சி வயப்பட்டதாகவே யோகநெறி சொல்லப்படுகின்றது.

நான்காவதுபடி ஞானநெறியாகும். சரியை, கிரியை, யோகம் என ஒவ்வொரு படிநிலை வழியான பயணத்தின் எங்கும் நிறைந்த பரம்பொருளே ஈசன் என்பதைத் தெளியும்




உச்சநிலையே ஞான நிலையாகும். உருவம், அருவம், அருவுருவம் என்னும் நிலைகளைக் கடந்து, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும், இறைவனை அறிவால் வழிபடுதலே ஞானநிலையாகும்.

பதி, பசு, பாசம் என்பவையே உண்மைப்பொருள் எனச் சைவசித்தாந்தம் வரையறுக்கின்றது. இறைவன், உயிர்கள், மலங்கள் ஆகிய மூன்றும் எப்பொழுதும் நிலைத்திருப்பவை. இவற்றுள் எதுவுமே மற்றொன்றால் படைக்கப்பட்டது அல்ல. மலங்கள் மூன்று வகையாக உள்ளன. அவை மூன்றையும் சேர்த்து மும்மலங்கள் என்பர். அவை அறிவற்ற சடப்பொருள்களாகும். இறைவனைச் சென்றடைவதே உயிர்களின் நோக்கமாகும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களே அதற்குத் தடையாகின்றன. அதனை அறிந்துகொள்ள முடியாத அறியாமையே உயிர்களின் துன்பங்களுக்குக் காரணம் என்பது சைவசித்தாந்தத்தின் வியாக்கியானமாகும்.

இத்தகைய இறையியல் வழிகாட்டல்கள் சைவசமயத்திலே நிறைந்து காணப்படுகின்றன. அதனை எடுத்துச் சொல்லவேண்டிய தேவை உள்ளது. அடுத்த தலைமுறை சைவசமயத்தவராக நின்றொழுகுவதற்கு அஃது அவசியமாகும்.

புலம்பெயர்ந்தசூழலிலே வாழ்வுமுறை மாறுபட்டதாகும். பல்லினக் கலாச்சார சூழலிலே வாழ்கின்றனர். கல்வி, கேள்விகளிலே அடுத்த தலைமுறை உச்சம் தொட எத்தனிக்கின்றனர். ஒருசெயலை செய்யும்போது ஏன்? எதற்கு? எப்படி? என்றவரிசையில் கேள்விகள் எழுப்புகின்றனர். பதில் கிடைக்காதபோது நம்பிக்கை இழக்கின்றனர்.

புலம்பெயர்ந்த சூழலிலே சைவத்தமிழருடைய எண்ணிக்கை குறைவானதாகும். இறையியல் நம்பிக்கைகளை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தவேண்டிய பொறுப்பை பெற்றோர்களே சுமக்கின்றனர். இறையியலில் அடிப்படையான பரிச்சயத்தையேனும் பெரும்பாலான பெற்றோர்கள் கொண்டிருப்பதில்லை. அதுவே கவலைக்குரிய நிலையாகும். அர்ச்சனை, குழுப்பாட்டு வழிபாடு (பஜனை), திருமஞ்சனம், திருவிழா போன்ற கிரியை சார்ந்த புறச்செயற்பாடுகளுடனேயே நின்றுவிடுகின்றனர். கோயில்களும், கோயில்கள் சார்ந்த செயற்பாட்டாளர்களுமே கூட அத்தகையதொரு நிலையிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றனர். அதனால், புதிய தலைமுறையினருக்கு இறையியலைக் கையளிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. அதுவே, புலம்பெயர்ந்த சுழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய சவாலாகும்.

**(முற்றும்)**

# தென்னாட்டு நிகழ்வுகளும் படைப்புகளும்



சிவபூமி ஞான ஆசிரமத்தில் செந்தமிழ் வழிபாடு



கார்த்திகைக் கடவுள் மங்கல நீராட்டுகள்



புதுவிடப் புகுவிழா



அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் உவர்மலை



கார்த்திகை நிறைமதி



கார்த்திகைத் திங்கள் தென்னாடு வெளியீடு

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதினைந்தாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 3ம் நாள் நிறைமதி அன்று ( 18-12-2021 வியாழக்கிழமை ) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org